அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளற்பெருமானின் வழி வழித் தொண்டர்கள்

# கல்பட்டு ஐயா
## (வரலாற்று அறிமுகம்)

## வரவேற்பு வாயில்

நம் அருள் தந்தையாம் வள்ளற்பெருமானின் வழி வழித் தொண்டர்கள் பற்பலர்.

அவருள் முதன்மை வாய்ந்தவர் கல்பட்டு ஐயா.

அவர்களின் அருள் வரலாற்றினை, நேரிட்டவரை தொகுத்துப் படைத்திருக்கின்றோம்

உணர்வு மிக்க உள்ளத்தினர், படித்துப் பயன் பெறப் பரவுகின்றோம்.

**மன்ற ஆசிரியர் குழுவினர்.**

This e-book can be downloaded for free from
http://www.vallalar.org

**வள்ளலார் இளைஞர் மன்றம்**
**46-அ, கோட்டக்கரை**
**வடலூர்-607303.**

**கல்பட்டு ஐயா**
**சிவகனி வெளியீடு**
**மூன்றாம் பதிப்பு:1994**

உ

<u>இராமலிங்கர் துணை</u>

<u>கல்பட்டு ஐயா</u>

<u>திருவடி முறயீடு!</u>

சீர்இடம் பெறும் ஓர் திருச்சிற்றம் பலத்தே
திகழ்தனித் தந்தையே! நின்பால்
சேரிடம் அறிந்தே சேர்ந்தனன்; கருணை
செய்தருள்; செய்திடத் தாழ்க்கில்
யாரிடம் புகுவேன்? யார் துணை என்பேன்?
யார்க்குஎடுத்து என்குறை இசைப்பேன்?
போரிட முடியாது இனித்துய ரொடு; நான்
பொறுக்கலேன்; அருள்கஇப் போதே.

திருவருட்பா

<u>சிவகனி தொழுவாம்</u>

திருநறுங் குன்றத்து எழில்மலை முடிமேல்
குருவருங் காலங் குறித்து, இனிது அமர்ந்தே,
ஒருவரும் இல்லா உவமைநம் பெருமான்
திருவருள் பெற்ற சிவகனி தொழுவாம்.

வான்ஒளி அமுதக்காவியம்

<u>அடியவர் வருகை</u>

1867-ஆம் ஆண்டு, கோடைக்காலம். கடும் வெப்பம் உயிர்க்குலத்தைக் கலக்கி நின்றது. நீர் எங்கே என்று தேடி நிலை குலைய வைத்தது. நிழல் எங்கே என்று ஓட வைத்தது. சூரியனின் கதிர்களால் சூடேறி நிற்கும் மண்ணில் கால் வைத்து நடப்பதற்கே மக்கள் அஞ்சும் உச்சி வேளையில் ஓர் தவ வடிவம் நடந்து கொண்டிருந்தது!

அண்டம் எல்லாம் தலைவணங்கும் வடலூரைக்காண அடங்காத ஆவல்! வான்நாடர் கூடி நின்று வாழ்த்தும் வடல் வெளியைக் காணத் தணியாத ஆர்வம்! உண்மையைத் தெரிந்து கொள்ளச் சித்தர்கள் திரண்டு நிற்கும் உத்தர ஞான சிதம்பரமாம் வடலூரை வணங்கும் குறையாத ஊக்கம்! மக்கள் குலம் பசி அடங்கவும், வள்ளலின் வாயுரை கேட்கவும் வந்து வந்து போகும் வடலூரைக் கண்டுவிட வேண்டும் என்னும் உயரிய நோக்கம்! கருத்தினில் களிப்பு பொங்க,

வயிற்றினுள் பெரும்பசி பொங்க, வள்ளற்பெருமான் மலரடிகளை வணங்கும் வேட்கை கொண்டு வடல்வெளி நோக்கி வந்துகொண்டிருந்தது அத் தவவடிவம்.

அவர் ஓர் அடியவர்! விரைந்து சென்று பெருமானின் திருமுன்பு அடியற்ற மரம்போல் விழுந்திட்டார்!

கண்டுவிட்ட மகிழ்ச்சிக் கண்ணீர்; உணர்ச்சிப் பெருக்கில் உடல் புல்லரிப்பு; தாய்முகம் கண்டு தேம்பும் இளங்குழந்தையின் ஏக்கம்; கடைத்தேறும் காலம் வருமா? என்ற வினாவுக்கு விடை கண்ட மனநிறைவு; இத்தனையும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருக்கும் நிலையில் அருட் சூரியனின் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு அவ்வடியவர் கிடந்தார். வெளியில் ஆட்சி செய்யும் வெங்கதிரின் கொடுமைகளை எல்லாம் அந்த ஒளிக் கதிரவன் மாற்றிவிட்ட அருமை கண்டு ஆற்றாமை கொண்டு வீழ்ந்து கிடக்கும் அடியவரை அரவணைத்து ஆறுதல்மொழி வழங்கினர் வள்ளற்பெருமான்.

## <u>போதாதாங்காணும்?</u>

வந்தடைந்த அடியவரின் உள்ளத்துப் பசியையும் வாட்டும் வயிற்றுப் பசியையும் ஒருங்கே உணர்ந்திட்டார்கள் பெருமான். கூழைக் கரைத்து வைத்திருக்கும்படி முன்னரே திருவாய் மலர்ந்திருந்தார்கள். குறிப்புணர்ந்த அன்பர்கள் கூழினைக் கொண்டு வந்தனர்.

நம்பெருமானின் திருக்கைகள் கூழினை ஏந்தி வார்க்கத் தொடங்கின. இருகை ஏந்திக் குடிக்கத் தொடங்கினார் வந்த அடியவர். நமக்குக் கூழ்தானா உணவு என்று அவர் எண்ண வில்லை. பெருமான் வழங்குவது பேரமுதமாகுமன்றோ? ஊற்ற ஊற்றக் குடித்துக் கொண்டே இருந்தார். வயிறு நிறைந்து விட்டது. இளைப்பறக் கிடைத்தக் கூழ் போதும் போதும் என்று சொல்லத் துணிவு எழவில்லை. சற்குருநாதரிடம் சாதாரண அடியவன் எப்படிப் போதும் என்று சொல்வது என நினைத்தார். அதனால் மேலும் மேலும் குடித்துக் கொண்டிருந்தார். அதனை உணரலானார்கள் நம்பெருமான்.

“போதாதாங்காணும்?” என வினவி கூழ் ஊற்றுவதை நிறுத்திக் கொண்டார்கள். இசைவு கிடைத்த பின்பே அடியவரும் குடிப்பதை நிறுத்தினார். பசி ஓடியது! தத்துவங்கள் தழைத்தன. அகத்திலும் முகத்திலும் மலர்ச்சி ஏற்பட்டது. ஆன்ம விளக்கமும், கடவுள் விளக்கமும் அதிகரித்தன. ஏழையர் பசி போக்கும் அவ்வுண்மை வழிபாட்டிற்கு ஆட்பட்ட அடியவர் யார்? தொண்டர் யார்?

## <u>கல்பட்டு ஐயா</u>

அவர்தான் கல்பட்டு ஐயா! திருநறுங்குன்றத்தில் வள்ளல் சென்றெடுத்த நன்மணி! அவரின் உள்ளங் கண்டு உவகை கொண்டு ஏற்றுக்கொண்ட இயக்கத் தொண்டர்!

**<u>தொண்டர் குழாம்</u>**

நம்பெருமான் திருவடிகளைப் போற்றி நின்றவர்கள் பலர்; ஆட்பட்ட அடியவர்கள் பலர்; மாணவர்கள் பலர்.

அவர்களுள் கல்பட்டு ஐயா, தொழுவூர் வேலாயுதனார், இறுக்கம் இரத்தினம், காரணப்பட்டு கந்தசாமியார், கருங்குழி புருடோத்தமனார் போன்றவர்கள் முதன்மையானவர்கள். அவர்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கவர் கல்பட்டு ஐயா, காரணம் பெருமான் புகழ்கண்டு போற்றுதற்கு அனைவரும் கூடியவர்கள். கல்பட்டு ஐயாவோ வள்ளலே சென்று ஆட்கொள்ளும் தகுதி பெற்றவர்!

**<u>கல்பட்டு</u>**

செந்தமிழ் நலம்சார் தெய்வத் திருநாட்டில், நடு நின்று மேம்படுவது நடுநாடே! அத்தகு நடுநாட்டில் விழுப்புரம் வட்டத்தில் உள்ள ஊரே கல்பட்டு. அவ்வூரில் தோன்றியவர் கல்பட்டு ஐயா. இவரின் இயற்பெயரும் இராமலிங்கம் என்பதுதான்! இவரின் பிறப்பு, வளர்ப்பு, பெற்றோர், கல்வி, உறவினர் பற்றிய எவ்விதச் செய்தியும் இதுவரையில் கிடைக்கவில்லை. ஆயினும் சிறுபொழுதிலேயே தெய்வ நெறியினை எய்திடும் நாட்டம் இவருக்கு இயல்பாகவே இருந்தது. அதற்குரிய சாதனமாக நல்யோக நெறியினைப் பின்பற்றினார். அம்முறையிலேயே சிறந்து மேம்படவும் முற்பட்டார்.

**<u>தமிழகப் பயணம்</u>**

அதன் காரணமாகத் தமிழகம் முழுவதும் பயணம் செய்தார். தனது நிலையைச் சிறப்படையச் செய்யும் பெரியோரை நாடினார். எத்தனையோ பெருமக்களை-தவசியர்களைச் சந்தித்தார். யாரும் கல்பட்டு ஐயாவின் அனுபவத்தினும் தலை சிறந்து நிற்கக் கண்டிலர். தனக்கு நெறிகாட்டும் குருமார்களையும் கண்டிலர். இந்நிலையில் தம்மிடம் உள்ள அனுபவமே போதும் என்று மீண்டும் கல்பட்டிற்கே திரும்பினர்.

**<u>திருநறுங்குன்றம்</u>**

விழுப்புரம்-விருத்தாசலம் இருப்புப்பாதையில் உளுந்தூர் பேட்டை நிலையத்திலிருந்து வடமேற்கே 16-கி.மீ தொலைவில் திருநறுங்குன்றம் என்னும் ஊர் விளங்குகிறது. அவ்வூரில் ஒரு காலத்தில் சமணர்கள் நிறைந்திருந்தனர். அவ்வூரில் உள்ள அப்பாண்டநாதர் கோயில் பழமை வாய்ந்தது. சோழர் கால கல்வெட்டுக்கள் அங்குக் காணப்படுகின்றன. தற்போது அவ்வூர் திருநறுங்கொண்டை அல்லது திண்ரங்கோட்டை என வழங்கி வருகிறது.

தனது தவநெறி வாழ்வுக்குப் பொருத்தமான இடம் திருநறுங்குன்றம் என்று கல்பட்டு ஐயா அறிந்தார். ஆதலின் அவ்வூர் சென்றார். குன்றுகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்தார். அங்கே குடில் அமைத்துத் தவயோக நெறியினைத் தாம் பயின்ற அளவில் பழகி நின்றார். என்றேனும் ஒரு நாள் மேல் நிலை பெறுவோம் என்ற உணர்வில், குன்றாமல் அந்நெறியில் நின்றிட்டார். அத்தகு நிலையில்

குன்றிலிருந்து ஊருக்குள் சென்று உச்சிப்போதில் மட்டுமே கையேற்று உண்டு நின்றிட்டார்.

## யோகக் காட்சி

வழிகாட்டும் நல்லாசிரியர் தமக்கு வாய்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்து வந்தது. கல்பட்டு ஐயாவின் நல்லதோர் ஏக்கத்திற்கு விளக்கம் கிடைத்தது. அவருடைய யோகக் காட்சியில், குறிப்பிட்ட ஒரு திங்களில், குறிப்பிட்ட கிழமையில், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நாழிகையில் ஓர் ஞானாசிரியர் வந்து, வலுவில் ஆட்கொள்வார் என்ற குறிப்புப் புலனாயிற்று. கிடைக்கப்பெற்ற அத்திருவருட் குறிப்பின்பால், மாறாத நம்பிக்கை கொண்டார். அத்தெய்வத் திருநாளை அன்பர் பலர்க்கும் சொல்லி, ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தார்.

இச்செய்தியினை, “திருநறுங்குன்றத்தில் கல்பட்டு ஐயா என்னும் யோகியார், தமக்கு ஓர் ஞானாசிரியர், இன்ன மாதம், இன்ன தேதி, இன்ன கிழமை, இத்தனை மணிக்கு, வலிய வந்து ஆட்கொள்வார் என்று தாம் உணர்ந்தபடி, பலருக்கும் உரைத்து, பலரும் சூழ அவரால் குறிப்பிட்ட அதே நேரத்தில் நமது வள்ளற்பெருமான் வருகையை மாறாத நம்பிக்கையுடனும் பேரன்புடனும் எதிர்பார்த்திருந்தார்” என்று இராமலிங்க சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் எழுதிய பிறையாறு உயர்தவ சிதம்பர சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

## ஞான ஆசிரியர் ஆட்கொள்ளல்:

எங்கு எங்கு இருந்து உயிர் ஏது ஏது வேண்டினும் அங்கு அங்கு இருந்து அருளும் நம் பெருமானுக்குக் கல்பட்டு அடியவரின் வேட்கை புலனாயிற்று; அருள் தவிப்பு விளங்கியது.

மாறாத அன்பும் மங்காத நம்பிக்கையும் பூண்டு நிற்கும் அடியவரின் திருவூர் நோக்கி, மாட்டு வண்டி புறப்பட்டது. வடற்பெரு வெளியின் வேந்தரைச் சுமந்து கொண்டு தன் நடையில் சென்றது அது. திருக்கோயிலூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த வண்டியை அனுப்பிவிட்டு வள்ளற்பெருமான், தாம் மட்டும் திருநறுங்குன்றத்திற்கு நடந்தருளினார்கள்.

எவ்வுயிர்த் திரளும் தன் உயிர் எனவே எண்ணி இன்புறச் செய்யும் நம் பெருமானின் பொன்மலரடிகள் அவ்வூரிலும் பதியலாயின. கன்று இருந்த இடம் நாடிக், காராம் பசு செல்வது போல், மன்றிலே நடமிட்டுக் களிக்கும் திருவடிகள், நறுங்குன்றத்து மலைமேலும் நடைபயின்றன.

கருணாமூர்த்தியின் பேரருட் கண்மலர்கள், கல்பட்டாரின் குடிலின் மீது தோய்ந்திடலாயின! இரக்கத்தின் திருவுருவின் வரவினை எதிர்பார்த்து, எழுச்சியுடன் கூடியிருந்தனர் பலர். குறித்த காலத்தில், குடிலில் அடிவைத்துப் புகுந்திட்டார் அருட்பிரகாசர். கருங்கல் மனத்தினையும் கசிந்து உருக்கும் வடிவினையும், பேரின்ப நிலையினை வளர்க்கின்ற கண்களையும் ஒளி எனவும் வெளி எனவும் விளங்கும் திருவடிமலர்களையும் கண்டுவிட்டார் கல்பட்டார்!

உள்ளந் துடிக்க, உயிர் துடிக்க, உணர்ச்சி வெள்ளம் உடல் முழுதும் பரவி, மயிர்க்கால் சிலிர்க்க, உணர்ந்தபடி வந்து அருளிய திருவுருங் கண்டு, அடியற்ற மரம்போல் வீழ்ந்தார்; கண்ணீர் மலர்களால் திருவடிகளை அர்ச்சித்தார்; மகிழ்ச்சிப் பெருக்கால் விம்மினார்; அருட்சத்தியின் திருக்கரம் பற்றிய வள்ளலின் தெய்வத் திருக்கைகள் கல்பட்டு அடியவரைப் பற்றித் தூக்கிடலாயின.

மறையமுதம் பொழிகின்ற பெருமானின் மலர்வாய் இன்பத் தேன் துளிகளை வழங்கியருளியது! கல்பட்டு அடியவரும் மற்றும் உள்ள அன்பர்களும், பெருமானின் திருவரவால் பெரும் பூரிப்பும், பேரெழுச்சியும், பேருணர்ச்சியும் உற்று நின்றிட்டார்கள்!

“பண்ணிய பூசை பலித்தது! பலித்தது! பரவினேன்; பணிந்தேன்; பதமலர் சூடினேன்; எண்ணிய படியே என்னை ஆட்கொண்டு செல்லுங்கள் என் இன்னுயிர் நாயகரே” என விரும்பி வேண்டி வணங்கினார், கல்பட்டார்.

சற்குருமணியின் சந்நிதானம் அடைவோம்; உயர் தொண்டு செய்து துயர் துடைப்போம்; கிடைத்தற்கரிய அறிவுச் சுடரைப் பெற்று விட்டோம் என்று பூரித்து மனக்களிப்புற்றார் அவர்.நம்பெருமானோ,”உத்தரவு தருவோம். அப்போது வந்தடையலாம்” என்று மெய்ம்மொழியினை அருளினார்கள்.

மெய்ஞ்ஞான தேசிகரின் கட்டளைக்கு அட்டியும் உண்டோ? முடிதாழ்ந்து, அடிபணிந்து, அதனை முடிமீது கொண்டிட்டார் அவ்வடியவர். இச்செய்தியினை வள்ளற் பெருமானுக்குத் தொண்டு பூண்டு, அவர்களையே வழிபடு கடவுளாகக் கொண்டு, வாழ்நாள் எல்லாம் திருவருட்பா இசையமுதில் தோய்ந்து, பிறரையும் தோய்வித்துச் சிறந்த சீடராக வாய்த்த, காரணப்பட்டு கந்தசாமி என்பார்,

**அருயோகம் செய்கல்பட்டார் சங்கற் பம்போல்**
**திருநறுங்குன் றத்தவர்க்குத் தீக்கைசெய்த சற்குருவே**
**திடஞானம் பெற்றுய்யத் தீக்கைசெய்த பின்னர்**
**வடலூரில் வந்திருக்க வாய்மலர்ந்த சற்குருவே!**

(சற்குரு புலம்பல் கண்ணி 52,53)

என்று பிரபந்தத் திரட்டு என்னும் நூலில் தெரிவிக்கின்றார்.

இதிலிருந்து நம்பெருமான் கல்பட்டாரை ஆட்கொண்ட செய்தியினை அறிய முடிகிறது. மேலும் இசைப்பாட்டாக்கிக் காட்டுகின்றார் இவ்வரலாற்றுச் செய்தியினை.

<u>பல்லவி</u>

**கதிபெற்றுய்யக் கடைக்கண் பாரையா ஸ்ரீ ராமலிங்கையா**
**கருணை செய்ய எமக்கிங்கு ஆரையா? கதி**

**அநுபல்லவி**

மதிதரு வடற்சபை ஸ்தாபக
மகிதலம் புகழ்பெறு வியாபக கதி

**சரணம்**

**செல்வர்கள் சூழும் திண்ரங் கோட்டை மலையிற்**
**சேர்ந்திருந்து அஞ்ஞானம் ஏக**
**சிறந்தகற்பட் டிராமலிங்கப் பிள்ளை**
**சிவயோகம் பன்னா ளாகச்**

**செய்திர்ய்ந்துந் தன்னைத் தலைவனை விளக்கும்**
**செய்யகுரு வலிந்தே வந்து கிளக்கும்**
**சிந்தைமேற் கொண்டிருக்கப் பலர்மதிக்கும்**
**திறம் அறிந்தோமைத் தக்கவர் விதிக்கும் கதி**

**-இராமலிங்கசுவாமிகள் சரித்திரக் கீர்த்தனை 117**

எனவே அவரை வலிந்து ஏற்றுக் கொண்ட உண்மையைக் காரணப்பட்டார் பாடல்களால் அறிகிறோம். அச்செய்தியினை உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்ட பண்டிதை அசலாம்பிகை அம்மையாரும் தெரிவிக்கின்றார்.

**இலகும் கல்பட்டு ஐயா என்று இசைக்கும் யோகி குருபரனார்**
**வலிய அணைந்துஆட் கொண்டருள வருதல் வேண்டும்எனும் விருப்பம்**
**நிலவி நறுங்குன் றப்பதியில் இருந்தார்! நிமலன் அதனை அறிந்தே**
**அலகில் அருளால் அடைந்து அவர்க்கும் தீட்சை அளித்து**

**-இராமலிங்க சுவாமிகள் சரிதம்**

மேலும் நம்பெருமான் 2-8-1866-ல் ஒரு திருமுகம் வரைந்தருளினார்கள். அத்திருமுகம் காட்டும் செய்தி:

இஃது

திருநறுங்குன்றம் மகாராஜராஜஸ்ரீ நயினார் இராமசாமி நயினாரவர்கள் திவ்ய சமுகத்திற்கு:

**உ**

**சுபம் உண்டாக. சுபம்.**

அன்பு அறிவு ஒழுக்கம் கருணை முதலிய நன்மைகளாற் சிறந்து சிவத்தைப் பொருள் என்று உணர்ந்து சன்மார்க்கத்தில் விளங்குகின்ற தங்கட்கு வந்தனம். வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடிக் கேட்க விருப்பமுடையவனாக இருக்கிறேன்.

அன்புள்ள ஐயா! சுமார் இருபத்தைந்து தினத்திற்கு முன் இவ்விடத்திலிருந்து சிவஞான விருப்பினராகிய ராமலிங்கமூர்த்திகளும் சண்முகம்பிள்ளை என்பவரும் தங்களிடம் போய் வருவதாகக் குறித்து வந்தார்கள். அவர்கள் அவ்விடம் வந்திருப்பதும் வேறிடம் போயிருப்பதும் தெரியவில்லை. தங்களிடத்தில் அவர்கள் இருந்தால் தற்காலம் அவ்விடத்தில் மழையில்லாமையால் மிகவும் நிர்ப்பந்தமாக விருப்பதாய் கேள்விப்படுகிறேன். ஆதலால், தாங்கள் அவர்களை இவ்விடம் வரும்படி செய்ய வேண்டும். அவர்கள் தங்களிடத்தில் இல்லாமல் வேறிடத்திலிருந்தால், அவ்விடம் இவ்விடமென்று எனக்குத் தெரிவிக்க வேண்டும். தாங்களும் சிவத் தியான சகிதர்களாய் தேக விஷயத்திலு மற்றைக் குடும்ப விஷயத்திலும் சர்வ சாக்கிரதையோடு இருக்கவேண்டும். நற்குணத்திலும் சிவபக்தியிலும் சிறந்த தங்கள் தம்பியார்க்கும் தங்கள் புத்திர சிகாமணிக்கும் சேஷமம் குறிக்க வேண்டும். நான் தற்காலம் கூடலூரிலிருக்கிறேன். வந்தனம். நமது ராமலிங்க மூர்த்திகளுக்கும் வந்தனம்.

**இங்ஙனம்,**
**சிதம்பரம் இராமலிங்கம்.**

**<u>அசஷய-வரு ஆடி-மீ 19உ.</u>**

“இதனால் கல்பட்டு சுவாமிகளை அடிகள் ஆட்கொண்டது 1866க்கு முன்னரே என்பது பெறப்படுகிறது” என்று உயர்தவ ஊரன் அடிகளார் தாம் எழுதிய இராமலிங்க அடிகள் வரலாற்றிலும் தெரிவித்துள்ளனர்.

**<u>உத்தரவு வந்தது</u>**

சன்மார்க்க சங்கம் தொடங்கிய காலையிலேயே அஃதாவது தருமச்சாலை தோற்றுவித்ததற்கு முன்பே கல்பட்டு அடியவர்க்கு வள்ளற்பெருமான் உத்தரவு வந்தது!

காலம் கனிவதற்கு காத்துக் கிடந்த அன்பர்க்கு உவகை ஏற்பட்டது. ஞானப் பயிர் வளர்க்கும் நோக்கோடு ஞானச் சேவடிகட்கு ஈனமில் பணி செய்திடும் திடத்தோடு புறப்பட்டார் கல்பட்டார்.

**<u>ஞானாசிரியரைக் காணல்!</u>**

கருங்குழியினை வந்தடைந்தார்; பெருங்கருணை மலரடிகளைத் தொழுதிட்டார்; அழுதார்; மகிழ்ச்சி வெள்ளத்தில் உள்ளத்தைக் குளிப்பாட்டினார்; கண்ணீர் வெள்ளமோ உடலைக் குளிப்பாட்டியது! அவர் உணர்ச்சிப் பெருக்கினை உணர்ந்த நம்பெருமான் அரவணைத்து ஆட்படுத்த வேண்டும் தானே? ஆனால் கல்பட்டார்க்குப் பின்னும் ஓர் உத்தரவு பிறந்தது!

“ஆறு மாத காலம் பூர்வ ஞான சிதம்பரமாகிய தில்லையம்பதியிலிருந்து, பின் நம்மை வந்தடையுங்காணும்” என கட்டளை இட்டார்கள் பெருமான்.

திருக்குறிப்பின் நோக்கம் திருத்தொண்டர்க்குப் புலனாயிற்று. மாமறைகளும் சூடரும் பாத முடிகளைச் சூடிக்கொண்டு பயணமானார் கல்பட்டு ஐயா.

## தில்லை வாழ்க்கை

சிதம்பரம், திருமூலர் சிவயோகத்தில் திளைக்கின்ற இடம்; பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆனந்த நடங்கண்டது. நந்தனார் ஒளிப்பிழம்பில் ஒன்றியது; மாணிக்கவாசகர் சுத்த வெளியில் கலந்தது; சீர்காழி முத்துத்தாண்டவர் ஆடுகின்ற சேவடியை அடைந்தது.

எனவே ஒப்பற்ற தில்லைச் சிற்றம்பலத்தில் பூர்வ ஞான சிதம்பரத்தின் பெற்றிகள் விளங்குவதனால், அங்கிருந்து பயின்று மேம்பட வேண்டும் என்றே வள்ளற்பெருமான் தம் அடியவரை அனுப்பி வைத்தார்கள். பெருமான் அருளிய வண்ணம் ஆறு மாதங்கள் தில்லைக் கூத்தனுக்கு அடிமை பூண்டார் கல்பட்டார். அதன் பின்னர் மீண்டிட்டார் வடல் வெளிக்கு! அப்போதுதான், கோடைக் காலமும் கடும் வெப்பமும், கொடுங்கோல் ஆட்சி புரிந்தது. அருள்வெளியாம் வடலூரின் அறச்சாலையில் கூழ் அருந்து நின்றார். அக்காலையில்தான், “போதாதாங்காணும்” என்று வள்ளல் பொன்னுரை வழங்கியருளினார்கள்!

## சிலுகிழைக்காதீர்கள்!

அப்போது பெருமானின் ஆணையின்படிச் சாலையின் கிழக்குப் பக்கத்தில் கிணற்றிற்கருகில் இருந்த குடிலில் புகுந்திட்டார். ஒருமையுடன் வள்ளலின், திருவடி மலர்களைத் தியானித்து, யோகத்தில் அமர்ந்திட்டார். “எண்ணிய வண்ணம் இரு” என்ற இடத்தில் இருந்தது மனம். அவ்வாறு இருந்தது ஒரு சில மணிகளும் அல்ல; ஒரு சில நாட்களும் அல்ல; ஒரு வாரத்திற்குப் பக்கமாக, அப்படி ஒருமுகப்பட்டு ஒன்றி நின்றார். அவரது நிலை பலருக்கும் வியப்பளித்தது. அவ்விடத்தில் சூழ்ந்து நிற்கத் தொடங்கினார்கள். அடியவரின் ஒருமைக்கு ஏதேனும் இடையூறு நேரலாம் என்று உணர்ந்த வள்ளற்பெருமான், “சிலுகிழைக்காதீங்காணும்: எழுந்து வருவார்; பொறுத்திருங்கள்,” என்று தொல்லை கொடுக்காதிருக்கும்படிக் கட்டளையிட்டார்கள். ஞான தேசிகரால் ஆட்கொள்ளப்பெற்ற கல்பட்டார் தன்னை மறந்து பரவச நிலை எய்தினார்.

## ஓலைக்குடில் யோகம்

அதற்குப் பின்னர் பரவசநிலை மாறிப் பன்முறை பணிந்து நம்பெருமானைப் போற்றி நின்றார். யோகநிலை மாறாது விளங்கத் தனியிடம் தந்தருளினார்கள் வள்ளல். அங்கே ஒளிவளர் உணர்வில் யோக நித்திரை செய்தது அவ் யோகக் குழந்தை. அக்குடில் இப்பொழுதும் சாலைக் கிணற்றின் தென்புறம் திகழ்கின்றது.

சாலை, பிணி தீர்க்கும் மருந்தகம். பசிப்பிணி ஒரு புறம்; அறியாமைப் பிணி மற்றொரு புறம். வருவார் வகை அறிந்து மருந்தளித்தார்கள் வள்ளற்பெருமான். பசிப்பிணிக்கு ஆவன செய்தபின் அறிவுப் பசியையும் கவனித்தார்கள். அன்பர்கள் தரம் அறிந்து சொற்பொழிவு செய்தார்கள். கல்பட்டாருக்கு வேண்டிய பகுதிகள் வருங்கால் வள்ளலே அவ்வடியவரை திருச்சமுகத்திற்கு அழைப்பித்தருளுவார்கள்; உரைப்பன உரைத்தருளுவார்கள்; மெய்யமுதம் ஊட்டுவார்கள்; மேன்மைக்கு வழி

காட்டுவார்கள். பெருமான் கழலினை நினைந்து ஒளிவளர் ஞான தீபத்தினின்று உருவாகும் உணர்வினைப் பருகிப்பருகிப் பரவசம் அடைந்திட்டார்!

## உம்மைச் சொல்லவில்லைங்காணும்!

ஒரு சமயம் சாலையில் வள்ளல் கருத்து மாமழை பொழிந்து கொண்டிருந்தார்கள். மழைபெய்தாலும் உழுது வைக்காத நிலத்தில் ஈரங்காக்காது. அதைப்போல் பக்குவம் அற்றவர்களுக்குச் சொல்வதெல்லாம் வீண் என்று கருதினார்கள் போலும்! சொற்பொழிவிற்கு இடையில், "இதுகாறும் அறிவுறுத்தியும் நூற்றில் ஓருவரேனும், ஆயிரத்தில் ஒருவரேனும் தேறவில்லையே!" என்று வருந்தி உரைத்திட்டார்கள்.

அதுகேட்டுக் கூட்டத்தார் அனைவரும் இடித்த புளிபோலும் எழுச்சி இன்றி இருந்திட்டார்கள். ஐயாவின் உரை ஒளி, பக்குவப் பட்டுள்ள கல்பட்டாரின் நெஞ்சக் கண்ணைத் தாக்கியது; கூசி நடுங்கினார்; உடல் படபடத்தது; கோபம் மீதூற சோர்ந்து வீழ்ந்திட்டார்; ஆற்றொணா துயர்க் கடலில் அழுந்திட்டார்!

அது கண்டேனும் யாரும் தம்மை அலட்டிக் கொள்ளவில்லை. ஏன் வீழ்ந்தார் என்று எண்ணவே அவர்களால் முடியவில்லை. எவ்வுணர்வும் அற்றவர்களாகவே இருந்தார்கள்!

அடியவரின் மனநிலை அறிந்தவர்கள் நம்பெருமான், எனவே அயர்ந்து விழுந்தவரை விரைவாக எடுத்து ஆசுவாசப் படுத்தினார்கள். அயர்வினை நீக்கினார்கள். உணர்ச்சியும் விழிப்பும் பெறச்செய்தார்கள்! தன் நிலைக்கு வந்ததும், "உம்மைச் சொல்லவில்லைங்காணும்" என்று ஆறுதல் மொழி பகர்ந்தருளினார்கள்.

தலைமை சான்ற சாதகன் ஒருவன் தான் தேற வில்லை என்று உணர்ந்தால் அப்படித்தான் அவனுக்குச் சோபம் உண்டாகும். அத்தோடு ஆருயிரினை விட்டு விடக் கூடத் தயங்க மாட்டான். அத்தகைய தீவிரதரம் உத்தமப்பக்குவம் வாய்க்கப் பெற்றவராகக் கல்பட்டு அடியவர் மேம்பட்டு விளங்கினார்!

## தொண்டு செய்வது உண்டுங்காணும்!

மாறாமல் ஒளிரும் யோகத்தில் அயராது திளைத்திட்டார் கல்பட்டார். அதன் காரணமாகத் தாளாத வெப்பத்திற்கு ஒருமுறை அடியவர் ஆளானார்; உடல் முழுவதும் சிரங்கு கண்டதாகவும், நீர் பெருகி அது ஆற நீண்ட நாட்கள் ஆயிற்று எனவும் கேள்வி.

அத்தகு நேரத்தில் நாளும் உணவு எடுத்துச் சென்று கல்பட்டு ஐயாவுக்குத் தர கட்டளையிட்டார்கள் பெருமான். இடையில் ஒருமுறை வள்ளல் வெளியூருக்கு எழுந்தருளினார்கள். சாலை அன்பரை அழைத்து மறதியின்றிக் கல்பட்டுக்கு உணவு வழங்கும் படித் திருவாய் மலர்ந்திருந்தார்கள்.

சாலை அன்பர்கள் மேலை அன்பர்கள் ஆகிவிட்டனர்; அவரை மறந்து விட்டனர். எனவே கல்பட்டு ஐயாவுக்கு உணவும் செல்லவில்லை.

“உண்கின்றீர்களா?” என்று கேட்கவும் இல்லை. இப்படியே சில நாட்கள் இருண்டு உருண்டன!

வெளியூரிலிருந்து நம்பெருமான் வடல்வெளிக்குத் திரும்பினார்கள். வந்தவுடன், “கல்பட்டுக்கு உணவு போயிற்றோ?” என்று வினவினார்கள். எல்லோரும் கல்லாய்ச் சமைந்து விட்டனர்; மாற்றம் யார் சொல்லுவர்? என்னவென்று சொல்லுவர்? வாயடைத்து நின்றனர்! “பிச்! (பைத்தியம்) உணவு கொண்டு வாருங்காணும்!” என்று ஏவலிட்டருளி தாமே உணவுக் கிண்ணத்துடன் கல்பட்டாரிடம் புறப்பட்டருளினார்கள்.

வள்ளற்பெருமான் எழுந்தருள்வதைக் கண்டுவிட்ட கல்பட்டார், பதைபதைத்தார்! உணர்ச்சி வயமானார்! “அடியேனை அழைத்திட்டால் ஆங்குவர மாட்டேனா? எதற்காக இவ்வண்ணம் எழுந்தருளியதோ? மன்றில் ஒளிரும் சேவடிகள் அன்றுவந்து மலையேறி ஆண்டதுதான் போதாதோ? இன்றும் இப்படியும் மண்ணுறுத்த எழுந்தருள எண்ணியதோ? என்ன செய்வேன்? என்ன செய்வேன்? என்வினை இப்படியும் ஆயிற்றோ?” என்று ஆற்றாமை கொண்டு அவதிப்பட்டார்!

அஃதுணர்ந்த நம்பெருமான், “அடியார்களுக்குச் சிவஞானிகள் தொண்டு செய்வது உண்டுங்காணும்” என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். கல்பட்டு அடிகளின் கையில் தாமரை இலையை வைத்தருளினார்கள். சோற்றினை உருட்டி உருட்டி வைத்தருளினார்கள். அச்சமும் நாணமும் அயர்ச்சியும் சோர்வும் அப்படியே கௌவிக் கொள்ள, வாங்கி வாங்கி உண்டு வயிறு புடைத்து நின்றார் கல்பட்டார்.

தேவர்களும் மூவர்களும் ஒரு சிவஞானியைக் கண்டு வழிபடுவது அரிதினும் அரிதாம். வள்ளற்பெருமானை ஒத்த சிவஞானிகள் தொடர்பு யாரோ சிலருக்குத் தான் கிட்டப் பெற்றிருக்கின்றது. அத்துணை பேரும் கொடுத்து வைத்தவர் அல்லவா? அதிலும் சிவஞானப் பெருஞ்செல்வர் செய்யும் தொண்டினை, ஏழைக் கல்பட்டார் ஏற்ற எளிமை தான் என்னேயோ! என்னேயோ!

<u>ஏழைகளுக்கு இரங்குங்காணும்!</u>

சாலைக்கு வருவோர் பலராவர், அவர்களுள் வசதி வாய்ந்த வரும் உண்டு; வசதி அற்றவரும் உண்டு. அவர்களுக்கு எப்படி உதவுவது? அதுபற்றித் தெரிவிக்க, ஒருநாள் கல்பட்டு ஐயாவையும் தலை மாணாக்கரையும் வள்ளல் அழைப்பித்தருளினார்கள்.

“ஒன்று உரைப்பேன், ஊன்றிச் செய்யுங்காணும்” என்று உரைத்திட முற்பட்டார்கள்.

“எவ்வகை ஆதரவும் இல்லாத ஏழையர் முகத்தை இங்குள்ளவர் பலரும் எண்ணிப் பார்ப்பதில்லை. வெள்ளை வேட்டிக் காரர்களுக்கு வேண்டியது கிடைத்துவிடும். ஆதலின் அக்கறை வைத்து ஆதரவற்றவர்கள் பசிநீக்க, கூழினைக் கண்ணும் கருத்துமாக வார்த்து வாருங்கள்” என்று அறிவுறுத்தினார்கள். அது முதற்கொண்டு தலை மாணவரும் கல்பட்டு அடியவரும் போட்டி போட்டுக் கொண்டு நான் நீ எனக் கூழை வார்த்து ஏழையர் வயிற்றுள் பற்றியெரியும் நெருப்பைத் தணித்து வந்தார்கள்.

அத்தகைய உத்தமப் பணியைச் செய்ய நம்பெருமான் யாருக்குக் கட்டளையிட்டுள்ளார்கள்? உண்மை அன்பு. உண்மை இரக்கம், உண்மை நம்பிக்கையுடைய உண்மைத் தொண்டர்கட்கு அன்றோ!

**<u>மகத்துகள்</u>**

பெருமானை அண்டி அருள்நெறி பழகும் அன்பர்கள் பலருள் தலை நின்றவர் கல்பட்டு ஐயா. உண்மைச் சாதனத்தில் தோய்ந்து உண்மை அடியவராய் விளங்கியவர் கல்பட்டு ஐயா. சன்மார்க்கச் சங்கத்துச் சாதுக்களின் வரிசையில் முன் நின்றவர் கல்பட்டு ஐயா. அவரைச் சன்மார்க்கச் சங்கத்து மகத்து அதாவது மகாத்மா என்று அக்காலத்திலேயே அழைத்தனர்.

ஒருகால் நம்பெருமான் தொழுவூர் வேலாயுதனார் பாடல்களை ஆய்ந்து உபயகலாநிதிப் பெரும்புலவர் என்னும் உயரிய பட்டத்தினை வழங்கி மகிழ்வித்தார்கள். அப்படித் தலைமாணக்கரின் பாடல்களைப் பார்வையிட்ட போது, அது சன்மார்க்கச் சங்கத்து சாதுக்கள் முன்னிலையில் நடைபெற்றது. அப்போது அப்பட்டமளிப்பு விழாவிற்குக் கல்பட்டாரும் நம் பெருமானால் அழைக்கப்பட்டார். இச்செய்தியினை, தொழுவூராரின் திருமகனார் திருநாகேசுவரர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“ஒரு காலத்தில் இந்நூலாசிரியர் (தொழுவூரார்) பத்தியினால், பொறித்து வைத்திருக்கும் பாக்களை தர்மலிங்கபிள்ளை, வெங்கடேச ஐயர், ஆடூர் குருக்கள் என்னும் சபாபதி சிவாசாரியார் முதலியார் மூலமாகக் கேள்வியுற்று சுவாமிகள் அவைகளை வரவழைத்து அவ்விடம் கூடியிருந்த சமரச வேத சன்மார்க்க சங்கத்தினராகிய ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள், கல்பட்டு இராமலிங்க சுவாமிகள் முதலிய மகத்துகள் முன்னிலையில் தானும் உடனிருந்து அவைகளின் சொற்சுவை, பொருட்சுவை முதலியவைகளை ஆராய்ந்து வியந்து, “நமது முதலியாரப்பா மதுர வாக்கிது; வித்துவான் பாட்டிது,” என்று இடையிடையே அருமை பாராட்டி, “மலர்வாய் மலர்ந்த மணிவார்த்தையிது” என்று தமது திருக்கரம் கொண்டே வரைந்தும் உபயகலாநிதிப் பெரும்புலவர்” என்னும் பட்டமளித்துப் பொறித்துப் வைத்துங் களித்தனர்.”

மார்க்கண்டேய புராணம், தொ-வே.வரலாறு.

மேற்குறித்த வரலாற்றுச் செய்தியின் மூலம் கல்பட்டு ஐயா சன்மார்க்கச் சங்கத்தினரால் பெரிதும் மதிக்கப்பட்ட மகத்துகளுள் ஒருவர் என்பது தெரிகின்றது.

**<u>கிடக்க விரும்புதுங்காணும்!</u>**

ஒருகால் மாட்டு வண்டியில் பயணம் செய்தார்கள் நம்பெருமானும் கல்பட்டாரும், இடையில் பெருமான் கல்பட்டாரை நோக்கி, “கிடக்க விரும்புதுங்காணும்” என்று படுத்திட விரும்பினார்கள்! உடனே கல்பட்டு ஐயா நம்பெருமானின் திருமுடியினைத் தம் தொடைமீது வைத்துத் தாங்கிக் கொண்டார். அவ்வாறு கல்பட்டாரின் தொடையில் நம்பெருமான் விரும்பியே படுத்திட்டார்கள்!

கல்பட்டாரின் தொடையில் வள்ளல் தம் திருமுடியினை வைத்துப் படுத்திடும் புண்ணியம் எந்த அடியவர்க்கு இதுவரை கிட்டியது? நம்பெருமான் சாதாரணமானவர்கள் அல்லவே! எல்லாம் வல்ல இறைவனின் அடியினை அறிந்தவர்கள்; நடுவினை அறிந்தவர்கள்; முடியினை அறிந்தவர்கள்!

அம்மட்டோ? எல்லாம் வல்ல இறைவனின் அடி நடு முடி கடந்து, அப்பாலும் அப்பாலும் கண்டிட்டவர்கள்! அத்துடன் அது அதுவாக நிறைந்து ஆண்டவனாக விளங்கி நிற்பவர்கள். அடிமுடியைக் கண்டோம் என்று சின்னம் பிடித்தவர்கள் அல்லவா நம்பெருமான்?

அப்பெருமானின் அற்புதத் திருமுடியைத் தாங்கும் பெரும்பேற்றினைக் கல்பட்டார் தொடைகள் பெற்றன. ஒப்பற்ற அப்பேற்றினைப் பெறுதற்கு எத்தனை கோடி தவந்தான் கல்பட்டாரின் தொடைகள் செய்தனவோ? யாரே பெறுவார் அப்பேறு?

**உலகமெலாம் இப்படி இருக்கிறதேங்காணும்!**

அருட்பிரகாச ஆண்டவரையும், பெரும்பேறு பெற்ற அடியவரையும் தாங்கிக் கொண்டு, வண்டி சென்று கொண்டு இருந்தது. அப்பொழுது வியப்புக்குரிய நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது!

நமது பெருமானின் திருமலர்க் கண்களினின்று கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அங்ஙனம் பெருகிய கண்ணீர் கல்பட்டாரின் தொடையை நனைத்தது. பின்னும் கண்ணீர் வழிந்து வண்டிப் பலகையையும் ஈரப்படுத்தியது. மேலும், வண்டிப் பாரையுங் கடந்து கீழே வழிந்து கொண்டிருந்தது. அப்படிச் சிறிது நேரம் மட்டும் நிகழவில்லை சிலமணி நேரம் தொடர்ந்து நிகழ்ந்திட்டது!

அதனைக் கண்டார் கல்பட்டார். எதுவும் எண்ணவில்லை. மனம் அடங்கிய நிலையுற்று ஒருமையில் நிறைந்தார். அப்படிப் பெருமான் விழி. நீர் வடிப்பதும் கல்பட்டார் மனம் அடங்கி ஒருமையில் இருப்பதும், தொடர்ந்து கொண்டிருந்தது. நெடு நேரம் கடந்தும், பெருமான் கண்ணீர் பெருக்குவது நின்ற பாடில்லை. மனம் விரிந்து, கண்ணீர் பற்றி சிந்திக்குமானால், பெருமான் கண்ணீர் பெருகும்நிலை கலையுமே என்று கருதியவராய் கல்பட்டு ஐயா, மேலும் ஒருமுகப்பட்டு உள்முகத்தில் நின்றார் பெருமானின் நிலையோ மாறிடவில்லை. தொடர்ந்திருந்து பார்த்து அயர்ந்த அடியவரின் ஒருமை கலைந்தது. நெஞ்சம் நினைக்கத் தொடங்கி விட்டது.

மூவாசையையும் வென்றவர்கள் நம்பெருமான்; சிவஞானப் பெருஞ் செல்வத்தை நிகரற்றுப் பெற்றவர்கள் அவர்கள். அத்தகைய பெருமானுக்கு உற்றகுறை என்னையோ? என்னையோ? எதனால் இப்படி அழுது கொண்டிருக்கிறார்கள்? என்று நினைத்தார் அடியவர்!

அவர் நினைவைப் பெருமான் உணர்ந்திட்டார்கள். உடனே எழுந்து கண்ணீரைத் துடைத்தவாறு, "பிச்! அதற்கு இல்லைங்காணும்; இந்த உலகமெலாம் இப்படி இருக்கிறதே என்கிறதுக்குத் தாங்காணும்!" என்று உரைத்தருளினார்கள்.

கல்பட்டாரின் விரிந்த நினைவு பெருமானின் நிலையை மாற்றிவிட்டது. அருள்நெறியைக் காதலித்து, உலகமெலாம் துன்பம் அற்று ஒன்றாதல் என்று வருமோ? என்பதனால் அல்லவா இப்படி அழுது அழுது ஆராமை அடைந்தார்கள்! உலகமெலாம் பேரின்ப நிலையிற் கலந்து அன்பால் ஒன்றுவது என்றோ? என்னும் கவலையால் அல்லவா பெருமான் விழி நீர் வடித்திட்டார்கள்! இந்தக் கவலை எத்தனை பேருக்கு இருக்கும் என்று எண்ணி எண்ணித் துயரில் அழுந்தினார் கல்பட்டு ஐயா. அந்தோ! உயிர்களின் துன்பமெலாம் ஓடி இன்பெலாம் பாடி ஆடும்நாள் எந்நாளோ? என அயர்ந்திட்டார் கல்பட்டார்.

<u>நெருப்புப் போட்டுக் கொளுத்துங்காணும்!</u>

வேதாந்த சித்தாந்த சமரசம் புகட்டும் நூல் ஒழிவிலொடுக்கம். அதனை இயற்றியவர் சீர்காழிக் கண்ணுடைய வள்ளலார். அந்நூலுக்கு விளக்கம் எழுதிப் பதிப்பித்தவர்கள் வள்ளற்பெருமான். ஒருநாள் ஆடூர் சபாபதியார் அந்நூலை ஓதிக் கொண்டிருந்தார். அப்பக்கமாக வள்ளற்பெருமான் சென்று கொண்டிருந்தார்கள். படிப்பதைக் கண்டு நின்றார்கள்.

"என்ன புத்தகம்?" என்று வினாவினார்கள்.

சட்டென்று எழுந்து பணிந்து நின்று "ஒழிவிலொடுக்கம் சுவாமி!" என்றார் சபாபதியார்.

"இப்புத்தகத்தை நெருப்புப் போட்டுக் கொளுத்துங்காணும்" என்று சொல்லிக் கொண்டே சென்றார்கள் வள்ளல்.

சபாபதியார் நெஞ்சம் ஆட்டங் கண்டது. இதைப் பதிப்பித்தவர்களே இப்படிச் சொல்லுகிறார்களே! காரணம் எதுவாக இருக்கும்? என்று தலையைப் பிய்த்துக்கொண்டார். எண்ணி எண்ணிப் பார்த்தார்; ஏதும் விளங்கவில்லை.

பெருமானின் உள்ளக் கிடக்கையை விளக்கவல்லாரைப் பற்றி நினைத்ததும், கல்பட்டு ஐயா நினைவு வந்தது. உடனே ஓடினார். கல்பட்டின் முன் நின்றார். அவரிடம் வள்ளல் கருத்தினைச் சொன்னார்.

அவர் "நீர் அப்புத்தகத்தைத் தொடவே அருகரல்லர்!" என்று உண்மையை விளக்கினார். இதுபற்றி இசைவாணர் காரணப்பட்டார் பாடிய பாட்டு ஒன்று பின்வருமாறு உணர்த்துகிறது:

**தாமச் சிடுவித்த நூலை ஆடூர்சிவா**
**சாரியார் அன்பொடு படிக்கத்**
**தரியாது எதிர்வந்து அங்கியிற் சுடுமென்று**
**சாற்றிய தால்மனம் துடிக்கத்**
**தக்கணங் கல்பட்டுச் சிவயோ கியரைச்**

**சார்ந்து புகலஅம் மொழிக்கு மெய்யுரை**
**தக்கவர் நீரலர் என்று புகன்றிடும்**
**தன்மை யறிந்த எம்போதம் அகன்றிடும்.**

**-இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் கீர்த்தனை-சரணம்183**

**உரையமுதம் உண்ணும் கல்பட்டார்**

வள்ளல் கேட்பவர் மனங்கொள்ளும்படிப் பல உரை விரிப்பார்கள். ஒருகால் வடகலை வைணவர்க்காக வேதாந்த தேசிகரின் "மூன்றில் ஒரு மூன்று" என்னும் குறளுக்கு நான்கு உரைகள் உரைத்தருளினார்கள். மற்றொருகால் திரிசிரபுரம் மகாவித்வான், பெருமான் திருமுன்பு பணிந்து இங்கித மாலை பாட்டொன்றுக்கு உரையருள வேண்டினார். வள்ளல் முதல் பாட்டுக்கே உலகியல் தொடர்புள்ள பல உரைகளை நான்கு மணிநேரம் விளக்கினார்கள்; அது அவர்க்குப் புரிந்தது.

மேலும் அனுபவ உரையாகிய பேரின்ப உரையினை சொல்லத் தொடங்கினார்கள். அது புரியாமல் மீனாட்சி சுந்தரனார் திகைத்தார். "தொழுவூராரும் கைவிட்டார்" என திருவாய் மலர்ந்து, பெருமான் விரிவுரையை நிறுத்திக் கொண்டார்கள்.

கேட்பவர் பக்குவம் அறிந்து சொல்லும் பாங்கு வியப்புக் குரியது; சமயத்தில் பற்றுள்ளவர்களுக்குச் சைவம், வைணவம் முதலிய சமயச் சார்பான விளக்கம்; மதத்தில் பற்றுள்ளவர்களுக்கு வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதச்சார்பான விளக்கம்; கல்லாதவர்களுக்கு உலகியல் சார்பான விளக்கம்; கற்ற புலவர்களுக்கு இலக்கிய இலக்கணம் பற்றிய விளக்கம்; தொழுவூரார்க்கு உயர்வுடைய விளக்கம்; கல்பட்டு ஐயாவுக்கு அனுபவ விளக்கம் என்று இப்படு தனது கருத்துமணிகளை நம் பெருமான் தந்தருள்வார்கள்.

குருவித் தலையில் பனங்காய் வைக்க அவர்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். அவ்வாறு முடிந்த முடிவான தெள்ளமுதக் கருத்துகள் அருந்தி அருந்தி எத்தனைத் தடவைதான் இன்புற்றனரோ கல்பட்டு அடிகள்!

**கல்பட்டு ஐயாவின் ஆர்வம்**

சன்மார்க்க சங்கத்தினர் நன்னெறிகளை உலகினர்க்கு உணர்த்திட விழைந்தனர். அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பொருள்களையும் உலக மக்கள் காலமுள்ள போதே அறிந்து அனுபவித்திட உதவ முனைந்தனர்; அங்ஙனம் அறிவதற்கும் அனுபவித்தற்கும் விவேகம் விருத்தியாதல் வேண்டும்.

அதனை அடைவதற்குத் தக்க நன்முயற்சியைத் தரக்கூடிய பத்திரிகை ஒன்றை 1867க்குப்பின் வழங்குவிக்க இச்சை கொண்டனர். அதற்குச் சன்மார்க்க விவேக விருத்தி எனப் பெயரிட்டனர். அது சிறப்புற நடையிட அன்பர்கள் பலர் நன்கொடைகள் அளிக்க விரும்பினர். ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு உதவிட முன்வந்தனர்.

மாதந்தோறும் தாங்கள் தருவதை ஏடு ஒன்றினில் குறித்துக் கையொப்பம் இட்டனர். கல்பட்டு அடிகளும் அவ்வேட்டில் கையெழுத்திட்டு 2அணா பொருள் உதவி செய்ய ஒப்புதல் அளித்தனர். அதன் விளக்கம் பின்வருமாறு:

| <u>வ.எண்</u> | <u>ஊர்பேர்</u> | <u>கையொப்பம்</u> | <u>துகை</u> | | |
|---|---|---|---|---|---|
| | | | <u>ரூ.</u> | <u>அ.</u> | <u>பை.</u> |
| 1 | சிதம்பரம் | இராமலிங்கம் | க | 0 | 0 |
| 36 | கல்பட்டு | இராமலிங்கம் | 0 | 2 | 0 |
| 49 | திருநறுங்குன்றம் | சி.தானப்பநயினார் | 0 | 2 | 0 |

ஆதலின் உலகமெலாம் சன்மார்க்கம் தழைத்து ஓங்குவதில் கல்பட்டு அடிகளுக்கு இருந்த ஆர்வத்தினை அறிந்திடலாம். அதில் அவருக்கு இருந்த ஈடுபாடு பெரிது.

**<u>அடிமைச்சாசனம்</u>**

நமது பெருமான் சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பத்தில் தெரிவித்தருள்கின்ற செய்திகள் இவை:

அவத்தைகள் அனைத்தும் நீங்கிட நித்தியதேகம் பெற வேண்டும். அது பெறத் திருவருட் சுதந்தரம் வேண்டும்.

பின்னர், திருவருள் சுதந்தரம் நமக்கு எந்த வழியால் கிடைக்கும் என்று அறியத் தொடங்கிய தருணத்து. எனது யான் என்னும் தேக சுதந்தரம், போக சுதந்தரம், ஜீவ சுதந்தரம் என்னும் மூவகைச் சுதந்தரங்களும் நீங்கியவிடத்தே கிடைக்கும் என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

இவ்வாறு இறைவர் முன்னிலையில் விண்ணப்பித்துப் பெருவாழ்வை உறுதிப் படுத்திக் கொண்டவர்கள் வள்ளல் அவர்களின் வழிவழி வந்த தொண்டர்கள் பலரும் அடிமைப் பத்திரம் எழுதி உடல் பொருள் ஆவியை நம்பெருமானுக்குப் படையல் செய்துள்ளார்கள். அதனையும் வள்ளல் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அங்ஙனம் விரும்புகின்றவருடைய தற் சுதந்தரத்தை நீக்கித் திருவருள் சுதந்தரத்தைத் தந்திடும் உரிமையும் உயர்வும் வள்ளற்பெருமானுக்கு இருந்ததனால் அவ்வாறு அடிமைப்பத்திரம் எழுதிப் பெற்றுள்ளார்கள்.

**ஒரு சான்று:**

திருப்பாதிரிப்புலியூரில் வாழ்ந்த இரத்தினம் என்பவர் அடிமைப் பத்திரம்வழி, உடல் பொருள் ஆவியைப் பெருமானுக்கு ஒப்படைத்தார். அவர்தம் விண்ணபத்தைப் பற்றி அவரே பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"நான் பிறந்த காலத்தில் என் தாய் தந்தையர்களால் அண்ணாமலை என்று நாமகரணம் செய்யப்பட்டு இருந்தது. எனக்கு ஸ்ரீராமலிங்க சுவாமிகளால் ரத்தினம் என்ற பெயர் 8வது வயதில் இடப்பட்டது. எங்கள் குடும்பம் என் தகப்பனார் காலம் முதல் சுவாமிக்கு அடிமைப்பட்டு பத்திர மூல்யமாய் உடல் பொருள் ஆவி மூன்றும் தத்தம் செய்து அடிமைப்பத்திரம் என் தகப்பனார் எழுதிக் கொடுத்திருந்தார். நான் சுவாமியோடு கூடவே இருந்து அவருக்கு அடிமை செய்து வந்தேன்."

இவ்வாறு அன்பர்கள் பலர் ஆர்வத்தொடு வள்ளற் பெருமானிடம் அடிமைச்சாசனம் சமர்ப்பித்துள்ளனர். வழி வழித் தொண்டர்தம் பெருமை எதனாலும் அளக்கும் தகுதி உடைய தன்று. அன்பர்கள் கொள்ளும் ஆர்வத்தினைப் போல் கல்பட்டு ஐயாவும் நம்பெருமானின் திருச்சமுகத்திற்கு அடிமைப் பத்திரம் செய்து தர முன் வந்தனர். ஆனால் ஒரு பெரு வியப்பு! கல்பட்டு அடியவருக்கு நமது பெருமானே திருக்கைச் சார்த்தி அடிமைச் சாசனம் வரைந்தருளினார்கள். இந்நிகழ்ச்சி வள்ளல் மேட்டுக் குப்பத்தில் விளங்கிய போது 12-5-1872-ல் நிகழ்ந்தது. அவ்விண்ணப்பம் பின்வருமாறு அமைந்துள்ளது:

### போதநாச வந்தனம் செய்த விண்ணப்பம்

**உ**

ஸ்ரீபார்வதிபுரம் என்னும் உத்தர ஞான சிதம்பரத் திருப்பதிக் கண்ணே அகிலாதாரமாய் விளங்கும் ஸ்ரீசமரச வேத சன்மார்க்க சங்கத்துப் பெருந்தலைப் பதியாக வீற்றிருந்தருளும் அருட்பெருஞ்ஜோதியராகிய எமது ஆண்டவனார் திருச்சந்நிதிக்கு யான் எனும் போதநாச வந்தனஞ் செய்த விண்ணப்பம்:

எம் இறையவரே!

இதுபரியந்தம் யானாகத் தேடியதோர் பொருளென்பது இல்லையாகவே;

தேவரீர், பெருங்கருணையால் என்னை உய்யக் கொள்ள உபகரித்தருளிய உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் அறியாமையால் யான் எனது என்று கொண்டதோர் சுதந்தரமானது துன்ப இன்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றி இருந்தது ஒன்றை யான் பெரும் பொருளாக எண்ணி நின்றனன்.

ஆதலால் அச்சமரச சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் சமுகத்து நிற்கப்பெற்ற விசேடத்தால் அத்தற்சுதந்தரப் பொருளைத் தேவரீர் பெருங்கருணைச் சந்நிதி முன்னே அர்ப்பித்தனன்.

இனி, தேவரீர் அதனை அருள்வசமாக்கி ஏழையாகிய என்னையும், என்னையடுத்த சுற்றம், என்னோடு பழகிய நட்பினர் ஆதியரையும் உய்யக்கொண்டருளுக.

**இங்ஙனம்,**
**அடிமை, க.இராமலிங்கம்.**

**ஆங்கீரச-வரு;வைகாசி-மீ முதல்உ**
**மேட்டுக்குப்பம்.**

“இந்த விண்ணப்பம் கல்பட்டு (இராமலிங்க) சுவாமிகளுக்காகச் சந்நிதானமே எழுதி வைத்தது” என்று ஓர் பிரதியில் இத்திருமுக வரலாறு காணப்படுகிறது என்று எழுதியுள்ளார் திருவருட்பா பதிப்பித்த பாலகிருட்டினர்.

சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பத்தில் வள்ளற்பெருமான் விண்ணப்பித்து அருளியது போலவே இவ்விண்ணப்பமும் அமைந்துள்ளது. சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பத்தோடு இந்த அடிமைப்பத்திரம் மிகவும் தொடர்பு உடையது. ஒவ்வொரு வரும் உணர்ந்து உய்வதற்கான பல செய்திகளை முறையே கொண்டது. அதனை ஊன்றி நோக்கின் எத்தனையோ பேருண்மைகள் வெளிப்படுகின்றன.

1. உலகங்கட்குப் பற்றுக் கோடாய் விளங்குவது சமரச வேத சன்மார்க்க சங்கம்

2. அதன் ஒப்பற்ற தலைவராக வீற்றிருப்பவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே

3. ஆண்டவர் திருச்சந்நிதிக்குத் தற்போதம் நாசமடைய விண்ணப்பிக்க வேண்டும்

4. நாமாகத் தேடியது உடலும் அன்று; உயிரும் அன்று; உடைமையும் அன்று

5. இறைவர் பெருங்கருணையினாலே அம்மூன்றும் நமக்கு அருளப்பட்டன.

6. அவற்றில் நமக்கு எவ்வித உரிமையும் இல்லை; ஆண்டவர்க்கே அம்மூன்றும் உரிமையுடையன

7. அறியாமையினால் அவற்றை நம்முடையவை என்று நம்புகிறோம்.

8. வள்ளற்பெருமானை ஒத்த சன்மார்க்க சங்கத்து சாதுக்கள் திருமுன்பு பழக நேரின் நாமும் உரிமையில்லாத அப்பொருள்களை ஒப்படைக்க முன் வருவோம்.

9. தற்சுதந்தரம் நீங்கிய இடத்து தான் திருவருள் சுதந்தரம் கைகூடும்.

10. தன்னை ஏற்றுக் கொள்ள விண்ணப்பிக்கும்போது தன்னைச் சார்ந்தவர்களையும் ஆட்படுத்தி உய்விக்க வேண்டுதல் வேண்டும்.

மேற்கண்ட ஒப்பற்ற உயரிய செய்திகள் அவ்விண்ணப்பத்தில் காணப்படுகின்றன; நினைத்தற்கரிய கருத்துகள் அவை; கேட்டற்கரிய உயிர் உணர்வுகள் அவை; அவற்றை நெஞ்சகத்து வைத்துப் போற்றிப் பின்பற்றல் நம் கடன்.

இவ்வளவு அருமை வாய்ந்த விண்ணப்பம் யாருக்காக வரையப்பட்டிருக்கிறது? யார் வரைந்தருளியிருக்கின்றார்கள்? பெறும்பொறுப்பும் பெரும்பேறும் பெற்ற நின்ற தகுதி வாய்ந்தச் பக்குவர் கல்பட்டு ஐயா என்பதனால் தான் நமது பெருமானே அவ்விண்ணப்பத்தினை வரைந்தருளினார்கள்; ஒப்பமும் பெற்று வைத்துக் கொண்டார்கள்.

அவ்வாறு கல்பட்டு ஐயா உடல் பொருள் ஆவி மூன்றையும் தம் சற்குருநாதருக்கு ஒப்படைத்தார். அவர்கள் கட்டளை இட்ட வழியில் நின்று வாழ்ந்திட உறுதியோடு முற்பட்டார்.

<u>**அருள் நடம்**</u>

எவ்வுலகும் தன் அருள் ஆணையின்கீழ் விளங்கி உய்ய ஞான சிங்காதன பீடத்து அமர்ந்து, அருட்பெரும் தலத்து மேல்நிலையில் செங்கோல் செலுத்தி, அருள் ஆட்சி புரிந்து அருட்பெரும் போகம் சர்வ சுதந்தரத்துடன் துய்த்திருத்தல் பொருட்டாக எவ்வுலகும் அறிய அருள் சத்தியைத் திருமணம் புரிந்தருளி, எங்கும் எவ்விடத்தும் எவ்வுயிரின்பாலும் நம் பெருமான் அருள்நடம் செய்தருளும் காலம் வந்துற்றது.

<u>**சித்திவளாகத்தில் கல்பட்டு ஐயா**</u>

1874 ஆம் ஆண்டு ஸ்ரீமுக தைத்திங்களில் பூச நல் நாளில் நம்பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்டார்கள்.

அவ்வமயம் உண்மை அன்பர்கள் பலர் சூழ்ந்திருந்தனர். அடிமை பூண்ட நேயர்கள் பலர் குழுமி நின்றனர். பெருமானின் கட்டளையின் வண்ணம் திருவறை திருக்காப்பிடப்பட்டது. அவ்வாறு திருக்காப்பிட்டவர்களுள் முதன்மையானவர் கல்பட்டு ஐயா. வள்ளலின் நிறைவின்போது, அவர்களின் கட்டளையை நிறைவேற்றும் பெரும்பேறு கல்பட்டு அடியவர்க்கும் கிடைத்தது! திருவருள் ஆணையை நிறைவேற்றும் முதன்மையாளராகக் கல்பட்டு ஐயா விளங்கினார்.

“சுவாமிகள் திருக்காப்பிட்டுக் கொண்டதும் கல்பட்டு ராமலிங்க சுவாமிகளும் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களும் வெளியில் பூட்டிட்டு சீல் வைத்தார்கள்”

என்று இதுபற்றிச் சத்திய ஞானசபை வழிபாட்டு விதிகளைக் குறித்து 23-2-1928-ல் வாக்குமூல அறிவிப்பு கொடுத்திட்ட திருப்பாதிரிப்புலியூர் இரத்தினம் என்பவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு நம்பெருமான் ஆணையிடும் இன்றியமையக் கடமைகளைக் கல்பட்டு ஐயா நிறைவேற்றும் பொறுப்பினைப் பெற்று விளங்கினார்.

## சாலைப்பணி

வள்ளல் அனைத்துயிரினும் நிறைந்து விளங்கும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுத் திருக்காப்பிட்டுக் கொண்டபின் சத்திய தருமச்சாலையை நடத்துவிக்கும் பொறுப்பினை கல்பட்டு ஐயா ஏற்றுக்கொண்டார் அவ்வாறு மேற்கொண்டு நடத்துவிக்கும் பொறுப்பினை நமது பெருமான் கல்பட்டாருக்கே வழங்கியருளினார்கள்.

ஈரமும் அன்பும் கொண்டு இன்னுயிர்களை ஓம்பும் வேள்வியை அருமைக் கல்பட்டார் செய்துவந்தார். பெருமானின் கருத்தின்படி பசிப்பிணி மருத்துவத்தை அல்லும் பகலும் ஓயாமல் தொடர்ந்து செய்தார். ஓரிரண்டு ஆண்டுகள் அல்ல; ஒருபத்து ஆண்டுகளும் அல்ல; சற்றேறக்குறைய கால் நூற்றாண்டு அதாவது 25 ஆண்டுகளுக்கும் பக்கமாக சாலைப்பணியினை நயந்து நடத்தினார். அதனால் இம்மை மறுமை பேரின்பத்தால் நிறைகின்ற பெரும்பயனாம் விளைவையெலாம் தருமச்சாலையிலே பெற்றுக் கொண்டார். இவையெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் அல்ல; மெய்மைகளே ஆகும். அதற்கான விளக்கங்களை வடலூர் தெய்வ நிலையங்களின் அலுவலகப் பதிவேடுகள் காட்டுகின்றன!

## வழிவழித்தொண்டர்கள்

சாலைப்பொறுப்பு 1901 வரையில் கல்பட்டு அடிகள் கண்காணிப்பில் இருந்து வந்தது. 6-2-1902ல் அப்பொறுப்பினைத் தமது மாணவராகிய சுப்பராய பரதேசி என்பவரிடம் ஒப்புவித்தார். சுப்பராயர் தெலுங்கு நாட்டுக்காரர். அவர் தொண்டு புரியவே விரும்பி வந்தவர். கல்பட்டு ஐயா வழி, வள்ளற்பெருமானை நன்கறிந்து எதிரற்ற அன்புகொண்டவர். அவருக்கு உதவியாக சாலைப்பணிகளில் தோய்ந்தவர் கட்ட முத்துப்பாளையம் நாராயணர் ஆவார். அவரே 1927ல் பிரபவ வைகாசி 11ஆம் நாள் சாலைத்திருப்பணி முடித்தவர். இச்செய்தியினை பிறையாறு சிதம்பர சுவாமிகள் பின்வருமாறு குறிக்கின்றார்.

“குறிப்பிட்ட நாராயணர் அவர்களே சாலையை நீண்டநாள் கல்பட்டு ஐயாவுக்குப் பின் அவர் மாணாக்கராயிருந்து அவர் ஆணைப்படி சத்திய தருமச்சாலையை நடத்தி வந்த தெலுங்கு தேசத்து சந்நியாசியாகிய சுப்பராய சுவாமிகளுக்கு உறுதுணையாக இருந்து, சென்ற பிரபவ வருஷம் வைகாசி 11ந் தேதி சுமார் 37 வருஷங்களுக்கு முன் சாலை கட்டிடத் திருப்பணி வேலையை முடித்துப்பிரவேச விழா நடத்தி ஆண்டவன் அருளுக்குப் பாத்திரமானார்”.

இதிலிருந்து தொண்டுள்ளம் கொண்டு நெறி நின்ற தொண்டர்களை கல்பட்டு ஐயா உருவாக்கினார்; அவர்கள் தொடர்ந்து சாலையை நடத்தி வந்தனர் என்பது கண்கூடு. இதுபற்றிய சான்றினை 1896 சனவரியில் வெளிவந்த டிரஸ்டு மறுப்புப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

“வள்ளலார் திருக்காப்பிட்டுக்கொண்ட காலமுதல் வள்ளலார் குறிப்பின்படித் தருமச்சாலையின் தரும பரிபாலனம் சிலகாலம் சில சந்நியாசிகள் கூடி நடத்திக் கொண்டு வந்தார்கள்”. இதனால் கல்பட்டு அடியவரும் வழிவழித் தொண்டர்களும் சாலையை நடத்தியது புலனாகின்றது.

## சமாதி அடைதல்

வள்ளல் வழியில் மாறாத அன்புகொண்டு பணிசெய்தும், பரஞ்சுடர் கண்டுநிற்கும் யோகம் செய்தும் ஏறக்குறைய 35 ஆண்டுகள் வடல்வெளியில் வாழ்ந்த கல்பட்டு ஐயா, சுபகிருதுஸ்ரீ, சித்திரைமீ, 14ஆம் நாள் (26-4-1902) சனிக்கிழமை, கேட்டை விண்மீன் சதுர்த்தசி கூடிய நாளில் சிவயோகச் சமாதி கொண்டிட்டார். அன்பர்கள் அவரைச் சாலையின் கீழ்ப்புறத்தில் அடக்கம் செய்தனர். அங்கே கோயிலும் எடுத்துள்ளனர். நினைவு ஆலயமாக இன்று அனைவர்க்கும் அது வழிகாட்டு நிற்கிறது. அதன் முன்பு மேலும் மூன்று சமாதிகள் உள்ளன. கிழக்குப் புறத்தில் உள்ளது சுப்பராய பரதேசியார் சமாதி; மேற்புறத்தில் உள்ளது நெல்லூர் ஐயர் சமாதி; நடுவிலுள்ளது பிற்காலத்துக் கொண்டார் சமாதி. தொண்டு செய்து தம் வாழ்வை நற்பயன் உடையதாக்கி, அங்கே சமாதி கொண்டுள்ள தொண்டர்கள் அனைவரும் நல்வழி காட்டிகளாவர்.

## கல்பட்டு சுவாமிகள்

கல்பட்டு ஐயாவை, “கல்பட்டு இராமலிங்க சுவாமிகள்” என்று மிகவும் மதிப்போடு அன்பர்கள் குறிப்பிட்டு வந்தனர்; சான்றாகக் கடிதப்பகுதியில், ‘போதநாச வந்தன’ அடிக்குறிப்பில், “கல்பட்டு இராமலிங்க சுவாமிகளுக்காக” என்ற செய்தியினை அன்பர் ஒருவர் வரைந்திருப்பதாகப் பதிப்பாசிரியர் பாலகிருட்டினர் குறிப்பிடுகின்றார்.

மேலும் தொழுவூரார் திருமகனார் திருநாகேசுவரர் மார்க்கண்டேய புராண தொ.வே. வரலாற்றில், “கல்பட்டு இராமலிங்க சுவாமிகள்” என்று வரைந்துள்ளார்.

சத்திய ஞானசபை பற்றிய வாக்குமூலக் குறிப்பில் திருப்பாதிரிப்புலியூர் இரத்தினம் என்பார் “கல்பட்டு இராமலிங்க சுவாமிகள்” என்று எழுதியுள்ளார்.

பொதுவாகச் சுவாமிகள் என்று பலர்க்கும் வழங்குவது போல் கல்பட்டு ஐயாவுக்கும் வழங்கப்பட்டதல்ல; எல்லாம் உடையவரே ஆட்கொண்டதால் அப்பெயர் நிலவி வருகிறது. இவ்வாறு அன்பர்களால் மிகவும் மரியாதையுடன் அழைக்கப்படுகின்ற உயர் நிலையினை உற்றுக், கல்பட்டு ஐயா விளங்கினார்.

## கல்பட்டு மூர்த்திகள்

நமது பெருமான் திருநறுங்குன்றத்திற்கு 1866-ல் வரைந்த கடிதத்தில் கல்பட்டு ஐயாவைச் “சிவஞான விருப்பினராகிய இராமலிங்க மூர்த்திகள்” என்று குறித்தார்கள்.

சிவயோகப் படியினைக் கடந்து விட்டவர் கல்பட்டு அடியவர். சிவஞானம் பெறும் பெற்றியினை அடையும் விருப்பத்தை உடையவர் அவர். நம்பெருமானோ சிவஞானிகள்; கல்பட்டாரோ சிவஞான விருப்பினர்; ஆதலின், பெருமானிடத்து மாறா விருப்பினர் என்றும்; சிவஞான நிலையினை அடைவதிலும் என்றும் மாறாத விருப்பினர் என்றும் தெரிகிறது.

அத்துடன் கல்பட்டு ஐயாவை இராமலிங்க மூர்த்திகள் என்று சிறப்புக்கொடுத்து குறிப்பிடுகின்றார்கள் வள்ளல். மூர்த்திகள் என்னும் சொல்வள அமைப்பினைக் காணுங்கால் கல்பட்டு ஐயா மூர்த்திகள் பதம் பெற்றவராக விளங்கினார் என்று தெரிகிறது. சுந்தரமூர்த்தி, திருமூர்த்தி, பஞ்சமூர்த்தி, தட்சணாமூர்த்தி, புண்ணிய மூர்த்தி முதலான தொடர்களை ஆழ்ந்து எண்ணிடல் வேண்டும். அதன்பின் இராமலிங்க மூர்த்திகள் என்பதையும் எண்ணிடல் வேண்டும். பெருமான்பால் சூழ நின்ற அன்பர்களுள் கல்பட்டு ஐயாவே மேற்குறிப்பிட்ட மூர்த்திகளுக்கான பதத்தகுதியினைப் பெற்று விளங்கினவர் என்று தெரிகிறது.

## வழிபாட்டு முறைமை

ஆதலினால்தான் பெருமானின் வழிபாட்டோடு நாளும் கல்பட்டு ஐயாவுக்கும் வழிபாடு நடந்து வருகிறது. குரு வாரங்களிலும், பூசநாட்களிலும், வள்ளல் அவதார நாளிலும், வைகாசி 11, தைப்பூசம் போன்ற சிறப்பு நாட்களிலும், சாலையை வலம் வருவதுபோல், அன்பர்கள் கல்பட்டு ஐயா கோயிலினை வலம் வந்து பாடிப் பரவி, பணிந்து, ஆராதனை செய்து, வழிபடுகின்றார்கள்.

அங்கு சைவ அடியார் நால்வருக்குமான வள்ளல் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்களைத் தோத்திரம் செய்கிறார்கள். அப்படியானால் கல்பட்டாரும் நான்கு அடியார்களைப் போல ஓர் அடியாராகச் சன்மார்க்கத்தில் திகழ்கின்றார் என்று கொள்ளத் தானே!

ஆதலால் மரபு தெரிந்த அன்பர்கள் பலரும் வழிபட வருங்கால் முதன்முதலில் கல்பட்டு ஐயாத் திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுகின்றார்கள்; ஒருமை உணர்வோடு உள்முகத்தில் ஒன்றியும் அங்கே அமர்கின்றார்கள். மேலும் அப்போது வெளிப்படுகின்ற உணர்ச்சிப் பெருக்கால் தமக்கு வேண்டிய இம்மை மறுமைப் பேரின்பங்களை விண்ணப்பிக்கும் முன்னிலை இடமாக அவ்விடத்தைக் கொள்கின்றார்கள். அவ்வகையில் கல்பட்டு ஐயாவிடத்தில் பரிசுத்த உள்ளத்தோடு வழிபாடு செய்து பெருமானிடத்தில் உண்மை உணர்வுடன் வழிபட்டுப் பல பயன்களை அன்பர்கள் பெற்று வருகிறார்கள்.

சில ஆலயங்களில் விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்துவது போல் முறைதெரிந்த அன்பர்கள் வடல்வெளியில் முதல் வழிபாட்டினைக் கல்பட்டு அடிகளுக்குச் செலுத்துகின்றனர். அதற்குக் காரணம் கல்பட்டு அடிகள் வடலூரின் காவல் தெய்வமாக விளங்குகின்றார் என்று பலரும் நம்புவதே ஆகும்.

## கல்பட்டு ஐயா தோற்றம்

சிவந்தமேனி; எடுப்பான தோற்றம்; வாட்ட சாட்டமான உருவம்; நீண்டு மார்பில் அலைபாயும் தாடி; இடையில் ஒரு முண்டு; கையில் ஏற்றதொரு தண்டு; தோளில் மடித்துப் போட்டிருக்கும் துப்பட்டி; நடையில் மிடுக்கு. இந்தக் காட்சிக்கு உரிய தவவடிவமே கல்பட்டு ஐயா!

## <u>வழிபட்டு வள்ளலைக் காண்போம்!</u>

"வள்ளற்பெருமானிடத்து ஆராக் காதல் கொண்ட அடியவரே! உள்ளம் தன்னில் அவர்களை வைத்து உணர்ச்சி வழிபாடு செய்துவந்த பெரியவரே! வடல் பெருவெளியின் காவல் தெய்வமே! கல்பட்டின் ஐயாவே! சிவஞானம் விரும்பும் செல்வரே! திருநறுங்குன்றத்து இராமலிங்க மூர்த்திகளே! வள்ளற்பெருமானை வகைதெரிந்து வணங்கவும்; வருபயன் உயிர் இரக்கத்தாலேயே என்று உணரவும்; கருங்கல் மனம் கரைந்து, கண்ணீர் பெருகி ஆன்ம உருக்கத்துடன் அவ்வழி நிற்கவும் குறிப்புணர்த்துங்கள்! ஆட்கொள்ளும் வழியினைக் காட்டுங்கள்!" என்று வழிபட்டு வள்ளலைக் காண்போம்.

## <u>சிவநேச வெண்பா</u>

**இப்பாரில் என்பிழைகள் எல்லாம் பொறுத்தருள்என்**
**அப்பாநின் தாட்கே அடைக்கலம்காண்-இப்பாரில்**
**நான்நினது தாள்நீழல் நண்ணுமட்டும் நின்அடியர்**
**பால்நினது சீர்கேட்கப் பண்.**

**திருச்சிற்றம்பலம்**

***************************************************************

# வள்ளற்பெருமானின் வழிவழித் தொண்டர்கள்

**சுப்புராயப் பரதேசி**

**கட்டமுத்துப்பாளையம் நாராயணர்**

***************************************************************


# வள்ளற்பெருமானின் வழிவழித் தொண்டர்கள்


## 2. சுப்புராயப் பரதேசி

நமது அருள் தந்தையாம் வள்ளலின் பெரும் புகழ் எங்கும் பரவிக் கொண்டிருந்தது. வேதாந்தக் காற்று ஒருபுறம் வீசிக் கொண்டிருந்தது; சித்தாந்தத் தென்றல் ஒரு புறம் தவழ்ந்து கொண்டிருந்தது; ஆரிய சமாஜம் தளர் நடை இட்டது. பிரம்ம சமாஜம் பீடுநடை போட்டது; கிறித்துவ சமயம் வேரூன்றிக் கொண்டிருந்தது; மகமதிய சமயம் கப்பும் கவடும் விட்டது; உலகாயதம் உணர்வு பெறப் பாடுபட்டுக் கொண்டிருந்தது; சைவ சமயம் எல்லையை அளந்து கொண்டிருந்தது; வைணவ சமயம் வாதமிடத் தொடங்கியது. இத்தனைக்கும் பொது நெறியும், புது நெறியும் மெய்நெறியும், ஒளிர் நெறியுமாகிய பெருமானின் சன்மார்க்கம் பற்றித் தமிழகத்தவரும், மற்ற மாநிலத்தவரும் அறிந்திடலாயினர். அதுமட்டுமன்று; வெள்ளையர்களும் கூட விளக்கம் பெற்றிட நம் பெருமானை அடுத்தனர்; திருவாசகத்தை மொழி பெயர்த்த போப்பையரும், சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் பாடிய வேதநாயகரும், நம் பெருமானை அணுகி உயர்விளக்கங்கள் பெற்றனர். அக்காலத்துச் சங்கராச்சாரியார் கூட வேதத்தில் தோன்றிய ஐயப்பாட்டினை ஐயாவிடம் கேட்டுத் தெளிவு பெற்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர், வட்ட ஆட்சித்தலைவர், பிற அரசு அலுவலர்கள், வழக்குரைஞர்கள் கூட பெருமானை அண்டித் தங்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்துப் போக்கிக் கொண்டனர்.

அவ்வாறே அண்டை மாநிலத்தவர்களும் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாயினர். அவர்களுள் ஒருவர்தான் தெலுங்கு தேசத்து சந்நியாசி. அவர் பெயரோ சுப்புராயப் பரதேசி.

வள்ளல்பெருமான் கண்டெடுத்த வளர்மணிதான் கல்பட்டு ஐயா. கல்பட்டு ஐயா கண்டெடுத்த கண்மணிதான் சுப்புராயர். வள்ளலின் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உணர்வு சுப்புராயர் போன்றவர்களைக் கவர்ந்தது. தலயாத்திரை மேற்கொண்ட போது வடலூர் வந்து சென்றார் சுப்புராயர். அப்போது கல்பட்டு ஐயா, தொழுவூர்ப் பெருந்தகை, காரணப்பட்டார் ஆகியோர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சற்குரு நாதரைத் தேடிக்கொண்டிருந்த கல்பட்டு ஐயாவுக்கு வள்ளல் கிடைத்தது போல உண்மை அறச்செயலைத் தேடிக் கொண்டிருந்த சுப்புராயர்க்குக் கல்பட்டு ஐயா தொடர்பு கிடைத்தது.

வள்ளல் பெருமானின் சித்திப் பேற்றிற்கு முன்பே கல்பட்டு ஐயா வடலூரில் வசித்தார். வள்ளலின் பேறடைவுக்குப் பின் சுப்புராயர் கல்பட்டு ஐயாவை அடைந்தார். தவயோக நெறியிலும், உயிர்நேயத் தொண்டிலும் உடல், பொருள், உயிரினை ஒப்புக் கொடுத்த கல்பட்டாரின் நடைமுறைகள், சுப்புராயர்க்குப் பெரும் பயனை உண்டாக்கித் தந்தன. அதன் காரணமாக அடுத்து அடுத்து வடலூர் வரவும் பின்பு வடலூரிலேயே நிலை பெறவும் சுப்புராயர் முடிவு செய்தார்.

சுப்புராயரின் இளமைப்பருவம் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் செய்திகள் கிடைக்கவில்லை; என்றாலும் வடலூர்ப் பணிகளைத் தன் உயிர்ப் பணிகளாகச் சுப்புராயர் தேர்ந்து கொண்டார். அப்போது அவரது சரித்திரம் அதிசயிக்கத்தக்க சரித்திரம் என்பதில் ஐயமில்லை.

வள்ளல்பெருமான் பெருநிறைவு பெறுகின்ற தருணம் வந்து கொண்டிருந்தது. முதலில் உண்டாக்கிய சன்மார்க்க சங்கத்துப் பணிகளைத் தொழுவூரார் போன்றவரிடம் ஒப்படைத்தார்கள். இரண்டாவதாக உண்டாக்கிய சத்திய தருமச் சாலைப் பணிகளைக் கல்பட்டு ஐயாவிடம் ஒப்படைத்தார்கள். மூன்றாவதாக உண்டாக்கிய சத்திய ஞான சபைப் பொறுப்பினைச் சபாபதி சிவச்சாரியார் போன்றோரிடம் ஒப்படைத்தார்கள். நான்காவதாகத் திகழ வைத்திட்ட சித்திவளாகப் பராமரிப்பினைச் சேலம் கோல்டன் ஹவுஸ் ஞானாம்பாள், மேட்டுக்குப்பம் வாழ் பெருங் குடும்பத்தவரிடம் ஒப்படைத்தார்கள்.

ஆதலின் பெருமானின் அருட்சித்திக்குப் பின்னர் கல்பட்டு ஐயா, சுப்புராயர், தெலுங்கு தேசத்துப் பிராமண சந்நியாசி, கட்டமுத்துப் பாளையம் நாராயணர் ஆகியவர்கள் பராமரிப்பில் தான் சத்திய தருமச் சாலையின் ஜீவகாருண்யப் பணிகள் சீருடமும் சிறப்புடனும் தொடர்ந்து.

அத்தகைய தருணங்களில் வந்து வந்து ஊக்கமும் உணர்ச்சியும், உண்மை அறச்செயலையும் மேற்கொண்டவரே சுப்புராயர். திருமுருகனின் திருப்பெயரே சுப்பையன் என்பது. ஆன்ம அறிவின் விளக்கமாகத் திகழ்ந்திடும் தெய்வமே முருகன். அவனது அருட்பெயரையே தாங்கினார் சுப்புராயர். இராயர்-என்னும் சொல் அரசர் என்னும் பொருளைத் தரும். ஆன்ம அறிவுக்கு இயல்பு ஜீவகாருண்யம்; அந்த ஜீவகாருண்ய செந்நெறிக்கு அரசராகக் கிடைத்தவரே சுப்புராயர்.

<u>பரதேசி:</u>

மேலான நாட்டில் வசிப்பவர் என்பது பொருள். நாம் எல்லாம் உணவுக்கும் அதனைச் சார்ந்த உணர்வுக்கும் ஆட்பட்டுக் கீழான நாட்டில் உழன்று உழன்று உருக்குலைகின்றோம். இளமை முதலாகச் சீரிய துறவறச் செம்மலாகத் திகழ்ந்து ஒளிர்ந்தவர்தான் சுப்புராயர். இவ்வாறே சுப்புராயப் பரதேசி காலத்தில் அமாவாசைப் பரதேசி என்பார் சத்திய ஞானசபைத் திருப்பணிகளை மேற்கொண்டுள்ளார்.

கல்பட்டு ஐயாவினால் உருவாக்கப்பெற்ற சுப்புராயர் சாலைப் பணிகளை 6-2-1902-ல் தன் பொறுப்பில் மேற்கொண்டார். இது பற்றிச் சத்திய தருமச் சாலைப் பதிவுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அது முதற்கொண்டு சாலை மேலும் மேம்பட்டு விளங்க மனம், வாக்கு, காயங்களால் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்.

அவ்வப்போது சாலையின் தெய்வப்பணி சிறப்புடன் நடக்க அண்டை அயல் ஊர்களுக்கு எல்லாம் கால்நடையாகவே சென்றார். அன்னதானத்திற்கு வேண்டிய பொருள்களைச் சேமித்து வந்திட்டார். அத்துடன் பெருமானால் சுட்டிக் காட்டப் பெற்ற கூழ் வார்க்கும் பணியினையும் ஆதரவற்றார் பசிதீர்க்கும் அறத்தினையும் இடைவிடாமல் மேற்கொண்டு வந்தார். அதன்வழி ஆன்ம லாபத்தினை ஈட்டிடவும் முயன்றார்.

அவர் உணவுப் பொருள் திரட்டப் பகற்பொழுதினைப் பயன்படுத்தாமல் இரவுப் பொழுதில் வெளியூர்களுக்குப் புறப்படுவார். பகலில் சத்திய தருமச்சாலைப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி இன்புறுவார். அவ்வாறு இரவில் செல்லும்போது இருட்டில் சுப்புராயரின் முன் இரண்டு லாந்தர்களோ அல்லது இரண்டு தீவர்த்திகளோ ஒளி உமிழ்ந்து செல்வது வழக்கம். அதனை உற்று நோக்கில் ஒன்றும் புரிவதில்லை. ஆதலில் அருட்பிரகாசரின் அருட்பெயரும், தன்னை ஆட்படுத்திய தவச்சீலர் பெயரும் ஒன்றேயாகித் திகழ்ந்ததனை உணர்ந்த அவர், இரவில்-இருட்டில் "இராமலிங்கம்" என்னும் திருநாமத்தையே இடையறாது ஓதி இருட்கடலையும், மருட்கடலையும் கடந்திட்டார்.

அதுபற்றிக் காரணப்பட்டு சமரசபஜனை கந்தசாமி ஐயா இவ்வாறு இசைப்பாட்டாக்கிப் பாடியுள்ளார்கள்.

**சற்பத்தியுற்ற சுப்புரா யப்பரதேசி**
**சத்திய தருமச் சாலைத்**
**தனிலிருந்து குளிஞ்சிக் குப்பத்துக்குத்**
**தனியே சென்றிடும் காலை**
**சாலையில் இரவில் ராந்தல் மாத்திரம்**
**தனக்குமுன் செல்வதறிந்து தோத்திரம்**
**தன்னுள்ளே சொல்லிக் கொண்டே ஏசுவும் மறைந்த**
**தரம் அறிந்தோம் வினை போகவும் நிறைந்த**

**கதிபெற்று உய்யக்கடைக்கண் பார் ஐயா**
**-ஸ்ரீராமலிங்கையா**

**கருணை செய்ய எமக்கு இங்கு யாரைய்யா**
**(பிள்ளைப் பெருமான் திருவிளையாடல்-9)**

சேக்கிழாரின் பெரிய புராண நடை நலம் உள்ளதாக "இராமலிங்கசுவாமி சரித்திரம்" என்னும் நூலினைப் பாடி பரவினார் பண்டிதை அசலாம்பிகை என்னும் அம்மையார்.

அவர்களோ

**"சாலையில் அன்னதானப் பணியினை ஆற்றச் சார்ந்து**
**மேலிவண் உறைந்த சுப்புராயப் பேர் விரவும் அன்பர்**

**கோலிய பொருளை நாடி இருளினில் குறுகும் காலை**
**வாலிய வெளிச்சம் முன்னே வயங்கும்”**

என்று உணர்த்திட்டாரால் -சித்திவளாகத் திருமாளிகைத் செறிவு:1:2:12 மற்றும் “திருவருட்பிரகாச வள்ளலார் திவ்விய சரித்திரம்” வரைந்தா பிறையாறு சிதம்பர சுவாமிகளும் பின் வருமாறு தெரிவித்துள்ளனர்.

“சாலையில் தொண்டு செய்து வந்த சுப்பராய பரதேசி என்பார் சாலை அன்னதான வசூலுக்குக் குளிஞ்சிக்குப்பம் முதலிய கிராமங்களுக்குச் செல்வது வழக்கம். மிகவும் பயங்கர வழியில் செல்லுங்கால் இரண்டு லாந்தர்கள் ஆள் தெரியாமல் முன்னே செல்லும். பரதேசி பயமற்று வழி கடப்பர்”

-பக்கம் 87

பகல் எல்லாம் சத்திய தருமச் சாலைப் பணிகள்: இரவெல்லாம் சாலை சரிவர நடத்தி வைக்க வேண்டி புறத்தின் இயங்கும் பணிகள். இப்படி அல்லவா வள்ளலின் தருமத்தை இனிதே நடத்தி வைக்க வந்திட்டார் தெலுங்கு நாட்டிலிருந்த சுப்புராயர்.

அப்போது சுப்புராயருக்குப் பழக்கமானவரே கட்டமுத்துப் பாளையம் நாராயணரெட்டியார். அத்துடன் சுப்புராயரின் அறிவுரையால் 60 ஆண்டுகட்குப்பின் சத்திய தருமச் சாலையைக் கல் கட்டடமாக ஆக்கித் தந்தவரும் அவரே. அவ்வாறு நாராயணர். நாகப்பட்டினத்துச் சன்மார்க்க அன்பர்கள் ஆகிய உண்மைத் தொண்டர்களை உருவாக்கும் பெருமுயற்சியிலும் ஈடுபட்டார் சுப்புராயர்.

சுப்புராயர் காலத்தில்தான் நம் பெருமானின் திருவுருவத்திருமேனி சாலையில் அமைக்கப்பட்டதாகக் கேள்வி. காரணம், தொடக்க நிலையில் உருவ வழிபாட்டிற்கு என பெருமானின் திருவுருவம், வளர்நிலையில் சத்திய ஞான தீபமும், நின்ற நிலையில் ஞானசிங்காதனப் பீடத்தில் ஞான சொரூபத்துடன் இறைவன் விளங்குவதாகவும் கருதி வழிபட அமைக்கப்பட்டதே அம்மூன்று நிலைகள். அப்படி இறைவர் வேறு. இராமலிங்கப் பெருமான் வேறு என்றில்லாமல் இருவரும் ஒருவரே என உணரவே அவ்வாறு அமைக்கப்பட்டது. இறைவரோ, உருவ நிலையில் இராமலிங்கம், உருஅருவ நிலையில் சத்தியஞான தீபம், அருவநிலையில் ஞான சிங்காதனத்தில் விளங்கும் ஞான சொரூபம் எனத் தரத்திற்கு ஒத்த வழிபாட்டு முறையைச் சேர்த்துத் தந்த இனிய தொண்டரே சுப்புராயர்.

அவர் 30 ஆண்டுகள் இடையறாமல் தவவலிமையும் அறவலிமையும் மிளிரத் தொண்டாற்றினார். அதனால் வள்ளல் பெருமானின் பெருங்கருணைக்கு அங்கமானார். பின்பு 1931-ஆம் ஆண்டு வைகாசி 10ஆம் நாள் பூச நன்னாளன்று உயிரடக்கம் பெற்றார். அவரது தவமேனி கல்பட்டு ஐயாவின் சமாதிக்கு எதிரில் கீழ்ப்புறத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்தகைய சுப்புராயரின் தொண்டினைத் தேவர்களும் மூவர்களுமே போற்றிப் புகழ்வார்கள்; அப்படியிருக்க நாமும் போற்றிப் புத்துணர்வு பெறுவோம்! புண்ணியப் பணியில் ஈடுபடுத்திக் கொள்வோம்!

## <u>வள்ளலாரின் வழிவழித் தொண்டர்கள்</u>

## 3. கட்டமுத்துப்பாளையம் நாராயணர்

### வளாகத்தில் வழிபாடு:

மேட்டுக்குப்பம்; அண்ட கோடிகள் அனைத்தும் வணங்கிப் போற்றும் சித்திவளாகம். அங்கே ஞானசிங்காதனப் பீடத்திற்கு ஆராதனை நடந்து கொண்டிருந்தது; அன்பர்கள் பேரார்வத்துடனும், உணர்ச்சிப் பெருக்குடனும் பாடிப்பணிந்து வழிபட்டுக் கொண்டிருந்தார்கள்; தன் வசம் இழந்து கண்ணீர்ப் பெருக்கி, கசிந்துருகி நின்று கொண்டிருந்தார்கள்.

ஆராதனைக்குக் கட்டாயம் வந்து கொண்டிருந்தார்கள் வள்ளற்பெருமான். அன்றைய தினம் வழிபாடு தொடங்கியும் கூட பெருமானைக் காணவில்லை; ஆனாலும் அன்பர்கள் உணர்வுப் பெருக்குடன் ஒருமித்த கருத்துடன் தரிசனம் செய்து கொண்டிருந்தார்கள்.

### அன்பரின் மனநிலை:

அத்தருணம், கூட்டத்தில் ஓரன்பர் ஓரமாக ஒதுங்கி நின்று வழிபட்டுக் கொண்டிருந்தார். எட்டி எட்டி ஆராதனையைக் கண்ணுற்று பரவசமானார்; கைகளை உச்சியின் மீது குவித்த படியே உணர்வுமயமாய் நின்றார். முன்வந்து நன்றாக தரிசனம் செய்ய அவருக்கு நேரிடவில்லை. அப்படிச் செய்ய அவர் விரும்பவுமில்லை.

### முன்வந்து தரிசியும் காணும்:

அப்போது வெளியில் சென்றிருந்த நம் பெருமான் திரும்பிக் கொண்டிருந்தார்கள். வழிபாட்டுக் கூடத்தில் திருமலரடிகளை எடுத்து வைத்தார்கள். அவ்வளவுதான் “ஏன்காணும் இப்படி ஒதுங்கி நின்று தரிசிக்க வேண்டும்? நன்றாக முன்வந்து தரிசியும் காணும்” எனத் திருவாய் மலர்ந்தருளி ஒதுங்கித் தரிசனம் செய்த அன்பரின் கைகளைத் திருக்கரங்களினால் பிடித்துக் கொண்டார்கள். முன்வரும்படி அழைத்தருளினார்கள்.

உடன், வள்ளற்பெருமானின் தெய்வத் திருக்கரங்களால் தீண்டப்பெற்ற அவருக்கு உச்சியைப் பிடித்து உலுக்குவதுபோல் இருந்தது; உடல் எல்லாம் சிலிர்த்துப் போனார்; தன்னை அறியாமல் தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தினார்; சோபம் மீதுறப் பெற்றார்; வேரற்ற மரம் போல விழுந்து வணங்கினார்.

### விம்மிதம் அடைந்தார்:

“ஆகா! சுத்த தேகம் பெற்றவர்கள் நம் பெருமான்; பிரணவ தேகம் பெற்றவர்கள் நம் ஐயா; ஞானதேகம் பெற்றவர்கள் நம் அடிகள்; அவர்களின் அற்புதத் திருக்கரங்களால் தீண்டப் பெற்றால் நமக்கு எவ்வகை உணர்ச்சி உண்டாகும் என்று எப்போதோ நினைத்தோமே! அது இன்று இப்போது இப்படி நடந்து விட்டதே; எனது பாக்கியமே பாக்கியம்!”.-என விம்மிதம் அடைந்தார்.

சொல்ல ஒண்ணாமல் நா தழுதழுத்தார்; “ஆண்டவனே ஆண்டவனே” என்று வாய்க் குழறினார்.

**<u>யார் அவர்?</u>**

அவர் தான் கட்டமுத்துப்பாளையம் நாராயணர். கல்பட்டு ஐயாவின் சீடரான சுப்புராயர் தேர்ந்தெடுத்த செல்வமணி; வடல் வெளியில் சாலைப் பணிகளை மாண்புடன் நடத்திய வளர்மணி. சத்தியதருமத்தைப் பல்லாண்டுகள் பாங்குடன் நடத்திய பால்மணி.

திருநறுங்குன்றத்திலிருந்து சாலைப் பணிகளுக்கு என வந்து சேர்ந்தார் கல்பட்டு ஐயா; தெலுங்கு தேசத்திலிருந்து அதற்கெனவே வந்து சேர்ந்தார் சுப்புராயர்; தென்னார்க்காடு மாவட்டம் பண்ணுருட்டிக்கு அடுத்த கட்டமுத்துப்பாளையத்திலிருந்து அப்பணிகளைத் தொடர்ந்திட வந்து சேர்ந்தார் நாராயணர். அவ்வாறு வெளியிடங்களில் இருந்து வந்து நிலையான பணிகளை மேற்கொண்ட தொண்டர் பரம்பரையைச் சார்ந்தவரே நாராயணர்.

**<u>இளம் பருவம்:</u>**

7-10-1855ல் பிறந்திட்டார். இளம்பருவத்தில் குடும்ப அலுவல்களில் ஈடுபாடில்லை. உழவினையோ-வேளாண்மையையோ கவனிக்கவில்லை. அடிக்கடி கண்டரக்கோட்டைப் புலவனூர்க்குச் செல்வதை வழக்கமாய்க் கொண்டிருந்தார்.

சோதிடர்கள்பாலும், மந்திரவாதிகள் பாலும் அக்கறை; சோதிடம் பயில, மந்திரம் பயில நாட்டம். ஆதலின் விவசாய வேலைகளில் இல்லை ஈட்டம்.

திருமணம் ஆனால் குடும்ப அலுவல்களில் ஆர்வம் உண்டாகும் எனப் பெற்றோர் தீர்மானித்தனர். “தைலம்மை” என்னும் நல்லம்மையை மணம் புரிவித்தனர். குடும்ப ஈடுபாடு சீராக வளர்ந்தது. நான்கு பிள்ளைகள் பிறந்தனர்.

ஆனாலும் மந்திர தந்திர சோதிடக்கலைகளில் ஈடுபாடு நின்றபாடில்லை. அத்துடன் நன்கு தரிசனம் செய்யும்படி அறிவுறுத்தினார்கள். புலவனூருக்குச் சென்று வருவதும் குறைந்த பாடில்லை.

**<u>நம்பெருமான் எழுந்தருளல்:</u>**

புலவனூரில் கருணீகர் மரபினரிடை சங்கடம் ஒன்று தோன்றியது. அதனைப் பெருமானிடத்து வந்து விண்ணப்பம் செய்தனர். புலவனூருக்குப் பெருமான் எழுந்தருளினார்கள். மரபினரிடை தோன்றிய மாற்றங்களை நீக்கி அமைதி செய்வித்தார்கள். அத்தருணத்தில் நம்பெருமானைக் கண்டு தன்வயம் இழந்தவரானார் நாராயணர்.

வந்த அலுவல் முடிந்து வடல்வெளிக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள் வள்ளல். அப்போது கட்டமுத்துப் பாளையம் நாராயணர் இல்லத்தில் 2,3 நாழிகை

தங்கினார்கள். அவ்வளவே: நாராயணர் அதுமுதல் நம்பெருமானுக்கு மீளா அடிமையானார்.

<u>பேரின்பப் பெருவாழ்வு:</u>

நம்பெருமான் சத்திய தருமத்தாலும், ஜீவகாருண்யச் சீலத்தினாலும், கொல்லாமை என்னும் குருஅருள் நெறியாலும் பேரின்பப் பெருவாழ்வினைப் பெற்று ஒளிர்ந்திட்டார்கள்.

இம்மை இன்ப வாழ்வினும் ஏற்றமுடையது மறுமை இன்ப வாழ்வு; மறுமை இன்ப வாழ்வினும் மகத்துவமுடையது பேரின்பவாழ்வு; பேரின்ப வாழ்வினைப் பெற்றவர் சுத்த பிரணவ, ஞானதேகங்களை ஒருசேரப் பெற்று ஓங்கி நிற்பார்கள். அவர்கள் கடவுள்தான் என்பதனைக் கேட்டறிந்தார். நம்பெருமானிடமும் கண்டறிந்தார்.

அப்போதுதான் "நம் பெருமானின் தூயதேக திருக்கரங்கள் தம்மீது பட நேர்ந்தால் எவ்வாறு இருக்குமோ", என ஏக்க முற்றார். அவரது அப்பழுக்கற்ற ஏக்கத்தினை தான் அன்றைய வழிபாட்டில் கைபிடித்து அழைத்துத் தீர்த்தருளினார்கள் வள்ளல்.

அப்படித்தான் 'நம் பெருமானுக்கு உணவு படைத்து உபசரிக்க வேண்டும்'- என ஏக்கமுற்றார் ஊத்தங்கால் மங்கலம் கேசவரெட்டியார். அதன்படியே ஒருநாள் அவரது இல்லத்திற்கு எழுந்தருளி ஏக்கம் தவிர்த்த ஏந்தலாகி விளங்கினார்கள் நம் பெருமான்.

<u>வடல்வெளி வாழ்வு:</u>

மூத்தமகன் குடும்பப் பொறுப்பினைக் கவனிக்கும் நிலைக்கு வளர்ந்திட்டான். அவனுக்குத் திருமண ஏற்பாடுகள் செய்து வைத்தார் நாராயணர். குடும்ப அலுவல்களை அவனிடம் ஒப்படைத்தார். தான்மட்டும் வடல்வெளிக்கு அடிக்கடி வந்து போகும் பழக்கத்தினை மேற்கொண்டிருந்தார். அப்போதுதான் தெலுங்கு தேசத்துப் பெரியவர் சுப்புராயரின் பழக்கம் உண்டாயிற்று. இவ்வாறாகச் சாலைத் தொண்டுக்கு நாராயணரை ஆட்படுத்தும் நிகழ்வுகள் நடந்த வண்ணமிருந்தன.

<u>உகந்த பணி:</u>

சுப்புராயர் தொடர்பினால் கட்டமுத்துப்பாளையத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. நாராயணர் அதற்கு ஆசானாய் அமர்ந்தார். தமிழும் தெலுங்கும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்டது. இடையிடையே சுப்புராயர் பள்ளிச் செயல்பாடுகளைக் கவனிக்கச் சென்று வந்தார்.

ஆனாலும் உத்தம தருமமும், சத்திய தருமமும், கடவுள் கற்பித்த உண்மைத் தருமமும், பசி நீக்குதலும், கொலை நீக்குதலுமே என்பதனைத் தேர்ந்து உணர்ந்தார். முடிவில் வடல்வெளிக்கு வந்து சாலைப் பணிகளை மேற்கொள்ளவே நாராயணர் விரும்பினார்; ஆதலின் பள்ளிப் பணிகளைப் பிறரிடம் ஒப்படைத்து

உத்தர ஞான சிதம்பரத்திற்கே வந்து விட்டார்; உடல், பொருள், உயிர் முழுவதும் சாலைப் பணிகளுக்கு என ஒப்புக் கொடுத்தார்; அவ்வாறு ஆன்ம நேயச் சீலராய்ப் பரிணாமம் பெற்றுக் கொண்டிருந்தார்.

**<u>சிதம்பர சுவாமிகள் செய்தி:</u>**

இராமலிங்க சுவாமிகள் திவ்விய சரித்திரத்தை வரைந்தவர்கள் பிறையாறு சிதம்பர சுவாமிகள். அவர்கள் சன்மார்க்க உலகின் கலங்கரை விளக்கெனத் திகழ்ந்தவர்கள். அவர்களோ.

“ஒருகால் கட்டமுத்துப் பாளையத்திலிருந்து நாராயண ரெட்டியார் என்னும் அன்பர் மேட்டுக்குப்பம் வந்தார். சுவாமிகளைத் தரிசித்தார். சிலநாட்கள் தங்கியிருந்தார்.

அப்படியிருக்குங்கால் தம்மேல் சுவாமிகள் பரிசம்பட்டால் எப்படி இருக்குமோ என்று அவா உடையவராய் தங்கியிருந்தார்.

அப்போது வெளியிலிருந்து வந்து சேர்ந்த ஐயா அவர்கள் நாராயண ரெட்டியாரை “தீபாராதனையைத் தரிசியும்” என்று கைகளைப் பற்றி சந்நதிக்கெதிரில் விட்டார்கள்.

அந்த நாராயண ரெட்டியார் அவர்களே சாலையில் நீண்ட நாள் கல்பட்டு ஐயாவுக்குப் பின் அவர் மாணாக்கராயிருந்து அவர் ஆணைப்படி சத்திய தருமச் சாலையை நடத்தி வந்த தெலுங்கு தேசத்து சந்நியாசியாகிய சுப்புராய சுவாமிகளுக்கு உறுதுணையாகி நின்றார்.

மேலும் சென்ற பிரபவ வருடம் வைகாசி 11-ஆம் தேதி சுமார் 37 வருடங்களுக்கு முன் சாலைக் கட்டடத் திருப்பணி வேலையை முடித்து பிரவேச விழா நடத்தி ஆண்டவர் அருளுக்குப் பாத்திரர் ஆனார்.

மேற்படி ரெட்டியார் அவர்கள் பெருமான் திருக்கரத்தால் பரிசிக்கப்பெற்ற பேற்றினை அன்பர்கள் விசாரிக்குந்தோறும் வள்ளல்பால் மாறாத அன்புடையவராய் அந்நிகழ்ச்சியைப் பற்றிக் கூறி அகம் நெகிழ்ந்து உருகி ஆனந்த பரவசராய் சூழ்ந்தோரையும் அம்மயமாக்கும் தகையினராய் விளங்குவார்” எனத் தெரிவித்துள்ளார்கள்.

-இராமலிங்க சுவாமிகள் திவ்விய சரித்திரம்

**<u>தெய்வப்பணி:</u>**

167 பிரபவ ஆண்டு வைகாசி 11ல் தொடங்கப்பெற்றது சத்திய தருமச்சாலை. அப்போது அது கூரை வேய்ந்த கட்டடமாகவே இருந்தது. தொடக்க நாளன்று செங்கல் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா மட்டும் நடந்தேறியது. ஆனால்

1.வள்ளல்பெருமான் 4 ஆண்டுகள் தங்கியருளிய காலத்தும்

2.கல்பட்டு ஐயா 25 ஆண்டுகள் தொண்டு செய்த காலத்தும்

3.சுப்புராயர் 30 ஆண்டுகள் பணிவிடை செய்த காலத்தும்

ஏழையர் பசிபோக்கும் தருமம், விழல் வேய்த கூரைக் கட்டடத்திலேயே நடந்து கொண்டிருந்தது.

அதனை மாற்றிச் செங்கல் கட்டடமாக்கும் எண்ணம் கொண்டார் நாராயணர். அவ்வெண்ணத்திற்கு ஆசி வழங்கினார் சுப்புராயர். ஒத்துழைப்பு நல்கினார்கள் நாகப்பட்டினத்து அன்பர்கள். அத்தகைய தெய்வ வலிவோடு வேண்டிய பொருள்களைச் சேகரம் செய்தார் நாராயணர். பெருமானின் திருவுள்ளப் பாங்கின்படி 60 ஆண்டுகள் நிறைந்த அடுத்த பிரபவ வருடத்தில் 1927-ல் வைகாசி 11ல் செங்கால் கட்டடப் பணி முடித்து அங்கே சத்திய தருமத்தை ஓங்கி வளரும்படிச் செய்திட்டார் உத்தமர் நாராயணர். அங்ஙனம் செய்து அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தனிப்பெருங் கருணைக்குப் பாத்திரரானார்.

**<u>தொடர்பணி:</u>**

தருமச்சாலை பிரவேசத்திற்குப் பேருதவி செய்தவர்களில் முன்னணி பெற்றவர் நாராயணர். அம்மட்டோ! சுப்புராய சுவாமிகள் போல நாராயணரும் ஊர் ஊராகச் செல்வார். தானியங்களைச் சேகரிப்பார். காய்கறிகளைச் சேகரிப்பார். சாலைப் பண்டங்களைச் சேகரிப்பார். எரிபொருள்களைச் சேகரிப்பார். அத்துணையும் வடலூர் சாலைக்குக் கொண்டு வந்து சேர்ப்பார்; பாதுகாப்பார்; இடைவிடாமல் அன்னப் படையல் செய்வார்; அகம் பூரிப்பார்; அவ்வாறு செய்த அகத் தொண்டால் திருவருட்பிரகாச வள்ளலின் திருவடிக்கு அணிகலன் ஆனார்.

**<u>நிறைபணி:</u>**

நம்பெருமானின் நலமிகு தொண்டினால் அகம்பூரித்து அனுபவம் பல பெற்றார். ஞான நூல்களுக்கு நல்விளக்கங்கள் தந்திட்டார். உண்மைத் தொண்டுக்குப் பின்னும் பலரை ஆளாக்கினார். ஆந்திர நாட்டு நெல்லூரிலிருந்து வந்திட்ட மறையவர் குலத்துச்சாது ஒருவரை மீளா அடிமையாக்கினார். 90 ஆண்டுகட்குப் பக்கமாகத் தெய்வத் தொண்டாற்றினார்.

நம்பெருமான் திருக்காப்பிட்டு அருளிய தெய்வத்திரு நாளாம் தைப் புனர்பூசத்தன்று 1945ல் உயிர் அடக்கம் கொண்டிட்டார். அவரது நல்லுடல் கட்டமுத்துப்பாளையத்தில் சமாதி செய்யப்பெற்றது. அவரது நல்லுணர்வு நமக்கெல்லாம் ஒளிவழங்கி உயர்த்துவதாகட்டும்.

1988- அடுத்த பிரபவ ஆண்டு தொடங்கி சத்திய தருமச் சாலையின் கான்கிரீட் திருப்பணி அற்புதமாக நடந்து 24-5-93-ல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

## வரலாற்றுக்கான சான்றுகள்

1. வள்ளற்பெருமான் வரைந்தருளிய திருமுகம் -1866
2. பெருமான் வரைந்தருளிய அடிமைச் சாசனம் -1872
3. டிரஸ்டி மறுப்புப் பத்திரிகை -1896
4. தொழுவூர் வேலாயுதனார் வரலாறு -1909
5. காரணப்பட்டார் பிரபந்தத் திரட்டு -1923
6. இரத்தின ஓதுவார் வாக்குமூல அறிவிப்புகள் -1928
7. திருவருட்பா-திருமுகப்பகுதி-பாலகிருட்டினர் -1932
8. இராமலிங்க சுவாமிகள் சரிதம்-அசலாம்பிகை -1934
9. தென்னார்க்காடு மாவட்டம்-சோமலே -1963
10. இராமலிங்க சுவாமிகள் திவ்ய சரித்திரம் -1964
11. வடலூர் வரலாறு -1967
12. இராமலிங்க அடிகள் வரலாறு-ஊரனடிகள் -1971
13. சிதம்பர சுவாமிகள் செய்திக் குறிப்புகள் -1974

# வள்ளற் பெருமான் அருள்நெறிகள்

1. கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்க.

2. எல்லா உயிர்களும் நமக்கு உடன்பிறந்தவர்களே என்று உணர்க.

3. சாதி சமய மத இன வேற்றுமை காணற்க.

4. பலியிடுவதனையும் சிறு தெய்வ வழிபாட்டினையும் விலக்குக.

5. பசித்த ஏழைகளின் பசி நீக்குதலே உண்மை வழிபாடாகக் கொள்க.

6. உயிர் நீத்தவர்களை எரித்துவிடாமல் அடக்கம் செய்திடுக.

7. நித்திய, ஜீவகாருண்ய, உண்மைநெறி ஒழுக்கங்களை கடைப்பிடிக்க.

8. உண்மை அன்பால், கடவுள் வழிபாடு செய்து, கடவுள் ஒளியை நமக்குள் காண்க.

9. உயிர்க்குலமே கடவுள் விளங்கும் ஆலயம் ஆதலின் இரங்கி இதம் புரிக.

10. அருட்பாவைக் கண்மணிபோல் காத்திடுக.

**திருச்சிற்றம்பலம்**

*****